உ

திருச்சிற்றம்பலம்

சிவஞானபோதம் - உரை

ஜி. வரதராஜன்

ஆசிரியர்

விலை 0-50 nP.

1967

உ
திருச்சிற்றம்பலம்

சிவஞானபோதம் - உரை

ஜி. வரதராஜன்
ஆசிரியர்

1967

கீதா பிரஸ், திருச்சி-2.

உ

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

சைவ சமயத்துக்கே உரிய நூல்கள் தோத்திரங்களும், சாத்திரங்களுமாகும். தோத்திரங்களைப் பன்னிரு திருமுறைகளாகவும், சாத்திரங்களைப் பதினான்கு நூல்களாகவும் கூறுவர். திருஞானசம்பந்தர் பாடியருளிய பதிகங்களை முதல் மூன்று திருமுறையாகவும், திருநாவுக்கரசர் அருளிய தேவாரத்தை நான்கு, ஐந்து, ஆறுவது திருமுறையாகவும், சுந்தரர் அருளிச் செய்த பாடல்களை ஏழாவது திருமுறையாகவும் மாணிக்கவாசக அடிகள் அருளிச் செய்த திருவாசகம் திருக்கோவையார் எட்டாவது திருமுறையாகவும், திருவிசைப்பா திருப்பல்லாண்டை ஒன்பதாவது திருமுறையாகவும், திருமூலர் அருளிச் செய்த திருமந்திரத்தைப் பத்தாவது திருமுறையாகவும், ஆலவாய்ப் பெருமான் முதலிய பன்னிரண்டு அருளாளர்கள் பாடிய பாடல்களைப் பதினோராவது திருமுறையாகவும் சேக்கிழார் அருளிச்செய்த பெரிய புராணத்தைப் பன்னிரண்டாவது திருமுறையாகவும், பெரியோர்கள் திருமுறையை வரிசைப்படுத்தியுள்ளனர். திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக் கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் ஆகிய பதினான்கு நூல்களும், பதினான்கு சாத்திரங்களாகும். திருவுந்தியார் முதலிய மூன்றும் முறையே திருவியலூர் உய்யவந்த தேவநாயனார், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார், மெய்கண்ட தேவநாயனார் என்பவரால் அருளிச் செய்யப் பெற்றவை. அருள்நந்தி சிவாசாரியார் சிவஞான சித்தியாரும், இருபா

இருபஃதும் அருளிச் செய்தார். உண்மை விளக்கம், திருவதிகை மனவாசகங் கடந்தார் அருளிச் செய்தது. ஏனைய எட்டு நூல்களும் உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்தவையாம்.

உந்தி களிறு உயாபோதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தவருள்
பண்புவினு போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று.

என்ற வெண்பாவால் பதினன்கு சாத்திரங்களின் பெயர் முறைகளை நினைவுபடுத்திக் கொள்ளலாம். இவைகளில் மெய்கண்ட தேவர் அருளிச் செய்த சிவஞான போதமே சித்தாந்த முழு முதல் நூலாய் விளங்குவது.

இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது. மொத்தம் 40 அடியே உடையது. இத்துணைச் சிறிய நூலில் பெரிய சமய உண்மைகளைக் கூறிய நூலை வேறு எம் மொழியிலும் பார்க்கமுடியாது திருமுறைகளில் பரக்கக் காணப்பட்ட உண்மைகளை வரிசைப்படுத்திச் சுருக்கமாக விளக்கிய பெருமை மெய்கண்டாருக்கே உரியது தேவாரம் முதலிய தோத்திரப் பாடல்களை இலக்கியமாகவும், சிவஞானபோதம் முதலிய சாத்திரங்களை இலக்கணமாகவும் கொள்ளுவது மரபு. முதற் சூத்திரத்தில், காணப்பட்ட உலகத்தைக் கொண்டு காணப்படாத முதல்வன் உண்மையை நிறுவினர். இது திருவள்ளுவர் காட்டிய நெறியாகும் இரண்டாவது சூத்திரத்தில் இருவினை உண்மை கூறி, மூன்ருவது சூத்திரத்தில் ஆன்மா உண்டு என்று கூறுகிருர். நான்காவது சூத்திரத்தில், உயிரினது இயல்பினைக் கூறி, ஐந்தாவது சூத்திரத்தில் அவ்வுயிர் முதல்வனுல் அறிகிறது என்று கூறுகிருர் ஆருவது சூத்திரத்தில் முதல்வன் வாக்கு மனத்தினுலே அறியப்படாதவன் என்றும், அருட்கண்ணுலே அறியப்படுபவன் என்றும் கூறுகிருர். அவனை அறிவதற்குரிய தகுதி உயிருக்கே உண்டு என்று ஏழாவது சூத்திரத்தில் கூறுகிருர். எட்டாவது சூத்திரத்தில் முதல்வனே குருவாக வந்து உயிருக்குத் தன்னை உணரும் திறத்தை உணர்த்து

வான் என்கிறார் ஒன்பதாவது சூத்திரத்தில் உபதேசப் பொருளைச் சிந்திக்கும் நெறியை உணர்த்துகின்றார். இறை நெறியில் நின்றால் துன்பம் நீங்கும் என்றும், இன்பம் உண்டாகலாம் என்றும் பத்துப் பதினொராவது சூத்திரங்களில் கூறிப் பன்னிரண்டாவது சூத்திரத்தில் இறை ஞானம் எய்தியபோதும் இன்றியமையாதவை அடியார் வழிபாடும், ஆலய வழிபாடும் ஆகும் என்று கூறுகிறார். இவ்வாறு பன்னிரண்டு சூத்திரங்களில் முப்பொருள் உண்மையைக் கூறி பற்றுகளை விட்டு மெய்ப்பொருளை அடைவதற்குரிய நெறியினைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறிய பெருமை மெய்கண்டாருக்கே உண்டு.

சிவஞானபோதம் என்ற அரிய நூலுக்குப் பாண்டிப் பெருமாள் விருத்தி உரை உண்டு. சிவஞான சுவாமிகள் அருளிச் செய்த சிற்றுரை, பேருரை என்ற இரு உரைகள் உள்ளன. அவர் இயற்றிய பேருரையைத் தான் திராவிடமா பாடியம் என்பர். இது தருக்கமுறையிலே சிறப்பாக அமைந்துள்ளது இன்னும் திருவாடுதுறை ஆதீனத்தில் வெளியான பழைய உரை ஒன்றும் உண்டு எனினும் இவ்வுரை எழுதுவதற்குரிய காரணம் ஒன்றுண்டு.

சைவ சித்தாந்தத்தைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு சித்தாந்தக் கலாநிதி உயர்திரு ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்களைக் கொண்டு திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில் தத்துவ விளக்கத் தொடர்ச் சொற்பொழிவு ஏற்பாடு செய்யப்பட்டது. பிள்ளையவர்களை அறியாத தமிழ் மகன் இக்காலத்தில் இருக்க முடியாது. அவர் சங்க இலக்கியப் பூங்காவில் தங்கிச் சாத்திரப் பூம் பொய்கையில் முழ்கித் திளைத்திருப்பவர்கள். இவர்கள் சங்க இலக்கியங்களில் பலவற்றுக்கு உரைகண்டதோடு மிகப்பழமையான இரும்புக்கடலை எனக் கருதப்பட்டு வந்ததும், சிவஞானபோதத்துக்குக் காலத்தால் முற்பட்டதுமாகிய ஞானாமிர்த மூலத்தையும், உரையையும் சிவாகமங்களைக் கொண்டு ஆராய்ந்து வெளியிட்டவர்கள். இதனால்

பழமையான தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையாரால் சித்தாந்தக் கலாநிதி என்ற பட்டம் கொடுக்கப்பெற்றவர். சிவஞான போதச் சிற்றுரைக்கும் யாவரும் எளிதில் படித்து அறியத்தக்க குறிப்பும் விளக்கமும் தந்துள்ளார்கள். அவர்கள் இக்கால நிலைக்கும் இளைஞர் மன இயல்புக்கும் ஒத்த முறையில் சிவஞான தத்துவங்களை எளிமைப்படுத்தி உரைத்தது இந்தத் தத்துவஞான தொண்டுக்குச் சிறப்பளித்தது. எனவே மாதந்தோறும் திருச்சி தமிழ் சங்கத்தில் இவர்கள் நிகழ்த்திய தத்துவச் சொற்பொழிவு சிறப்பாக அமைந்ததில் வியப்பில்லை. அச்சொற்பொழிவின் சாரமே இவ்வுரை நூலாகும். இவ்வுரையில் காணப்படும் உயர்ந்த கருத்துக்கள் அவருடையனவாகக் கொண்டு, குற்றம் குறை இருக்குமாயின் அவற்றை என்னுடையவாகக் கருதுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு மனம், மொழி, மெய்களால் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளித் தமிழ் சங்கத்தார் தமிழுக்கு சிறந்த தொண்டாற்றி வருகின்றனர். தமிழ் வேறு; சமயம் வேறு இல்லையாதலின் தத்துவ விளக்கச் சொற்பொழிவு ஏற்பாடு செய்வதற்கு இச்சங்கம் உதவியது. பலர் கேட்டுப் பயன் அடைந்த பெருமை இத்தமிழ் சங்கத்துக்கே உரியது. இவ்வுரை வெளிவருவதற்கும் இத்தமிழ்ச் சங்கமே காரணமாகும். இச்சங்கத்தார்க்குச் சிறப்பாக அதன் அமைச்சருக்கு அடியேனுடைய நன்றி உரித்தாகின்றது, இச்சொற்பொழிவை அமைப்பதற்கு எனக்கு உறுதுணையாய் இருந்து உதவிய திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் பணியாற்றிவரும் திரு. கு விஸ்வநாதன் அவர்களுக்கும் எனது நன்றி உரியது. தவருது வந்திருந்து கேட்டும், வினக்கள் எழுப்பியும் சொற்பொழிவைச் சிறப்பித்த பெருமக்களுக்கு எனது நன்றி பெரிதும் உரித்தாகும். சிறப்பாக அரசியலிலும், நீதித்துறையிலும், கல்வித்துறையிலும் மிக்க அனுபவம் பெற்ற அறிஞர்கள் வந்திருந்து சிறப்பித்தது எனக்கு ஊக்கம் தருகிறது. திருச்சிராப்பள்ளியிலும் சுற்றுப்புறங்களில் வாழ்கின்ற உயர்கல்வி கற்ற பெருமக்களும் வந்திருந்து இச்சிவப்

பணியை ஆதரவு செய்தது இறைவன் திருவருள் என்றே எண்ணி மகிழ்கின்றேன். இதனை உரிய காலத்தில் நன் முறையில் அச்சிட்டுத் தந்த திருச்சிராப்பள்ளி கீதா அச்சகத் தாருக்கும் எனது நன்றி உரித்தாகின்றது. இவ்வுரை நூலைத் தமிழுலகமும், சைவ உலகமும் பெற்றுப் பயனுறுவ தாக. என்னை இவ்வருட் பணியில் ஈடுபடுத்தி ஆட் கொண்ட சிராப்பள்ளிமேவிய நன்றுடையான் திருவடியை எனறும் மறவேன.

"சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி."

ஸ்ரீலஸ்ரீ மீனுட்சி சுந்தர தேசிக சுவாமிகள் அருளிய ஆசி

எல்லாங் கடந்த இறைவன் ஆகமம்
புகலும் பொருளைப் புவிதனில் உள்ளோர்
கண்டு தெளியக் காலமி லாமையால்
அருந்தவம் புரிந்து அருமறை தெளிந்த
புண்ணிய முனிவன் பூமியில் வந்து
கருணைப் பெருக்கால் காண விரும்பி
மெய்கண் டானென மேலோர் புகல
உரிமை பெற்ற உத்தம முனிவன்
செப்பிய நல்ல சிவஞான போதம்
என்றே கூறுவர் எழில்நலம் உணர்ந்தோர்
அந்நூற் பொருளை அறிந்த மேலோர்
கூறினர் உரையாய் கோதிலாக் கண்டென
அக்கா லத்தில் அமைந்த உயிர்கள்
கற்பூரந் தானும் கண்டதீப் போல
விளங்கினர் அதனல் வித்தக னருளால்
மும்மலம் நீங்கி முதல்வனைச் சேர்ந்தனர்
இக்கா லத்தில் இருக்கும் ஆன்மா
ஆமணக் கெண்ணைபோல் அமைந்த படியால்
ஐயம் திரிபு அமைந்தவ ராவர்
அவர்கள் தெளிவாய் அறிவைப் பெற்றிட
உரைத்த நூற்கோர் உரைதனைச் செய்தனன்
திருக்குறள் வேளெனச் செப்புவர் நல்லோர்
பலநூற் பொருளைப் பல்கா லாய்ந்து
தெளியப் பெற்றவன் சிவனடி பூசை
தினந்தினம் அன்பாய்ச் செய்யும் திறத்தன்
ஓங்கிய ஒழுக்கம் அமைந்த உத்தமன்
ருவலயம் புகழும் குருநமச்சி வாயன்

தவத்திற் காகத் தரைதனில் உதித்தவன்
இன்னேன் பெருமை இயம்பலும் வேண்டா
அவன் பெயர் வரத ராசன் என்பர்
வரத ராசன் வழங்கிய உரையைக்
கண்டவர் தெளிவாய்க் காண்பர் முதல்வனை
இன்னவன் உரைதான் எங்கும் விளங்குக
செய்தோன் வாழ்க சிறப்புடன்
எல்லா அன்பரும் இப்புவி வாழ்கவே.

உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டார் வரலாறு

சைவ சமய ஆசிரியர், சமய குரவர் சந்தான குரவர் என இருதிறப்படுவர். சமய குரவர், திருஞான சம்பந்தர் முதலிய நால்வர் என்பது யாவரும் அறிந்தது. இவர் நால்வரும் இறைவன் தமக்குத் தன் திருவருளை வழங்கியவாறே அந்நெறியில் நின்று, உளங் குளிர்ந்த போதெல்லாம் உவந்துவந்து தம் அனுபவங்களைப் பாடிய தோத்திரங்கள் வாயிலாக உலகில் சைவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய்தனர். சமய குரவர் நால்வரும் தனித்த நிலையில் தாம் தாம் தம் அருள் வாழ்க்கையை நடத்தினர், சந்தான குரவர் என்பவர் அவ்வாறின்றி ஒருவருக்கு மற்றொருவர் மாணுக்கராய்த் தாம் உபதேச முறையாலும், நூல் வழியாலும் பெற்ற திருவருள் நெறி விளக்கங்களைத் தாமும் அங்ஙனமே உபதேச முறையாலும், நூல் வழியாலும் உலகிற்கு வழங்கினர். எனவே, ஞான நெறியில் இங்ஙனம் இடையறாது வழி வழியாய் வந்து விளங்கினமை பற்றி இவர்கட்கு 'சந்தான குரவர்' என்பது பெயராயிற்று.

இத்தகைய ஞான சந்தானங்கள் நம் தமிழ் நாட்டிற் பல உள. அவை அனைத்திற்கும் முதற்குரவர் திருக்கயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமானே. அவரிடமிருந்து தோன்றி நிலவுலகில் வந்து விளங்கிய சந்தானங்களுள் நந்தி பரம்பரை, கந்த பரம்பரை என்றும் இரு சந்தானங்கள் நன்கு அறியப்படு

கின்றன. மற்றும் பல சந்தானங்கள் இருந்தமை அறியப்படுகிறது. கைலாசபதியாகிய 'சீகண்ட பரமேசுவரனிடத்தில் நேரே உபதேசம் பெற்ற மாணுக்கர்கள் எண்மர்' என்றும் 'அவ்வெண்மருள் தாம் ஒருவர்' என்றும் திருமூலர் கூறுகின்ருர். தாயுமான அடிகள் தமக்கு உபதேசம் செய்தருளிய மௌன குருவை, 'மூலன் மரபில் வரும் மௌனகுரு' என்று கூறுவதால், நந்தி பரம்பரையில், 'திருமூலர் மரபு' என்பது ஒன்று என்பது தெளிவாகும். எனினும், அம்மரபு இப்போது காணப்படவில்லை.

நந்தி பெருமானிடத்தில் உபதேசம் பெற்ற எண்மர்களில் சனற்குமார முனிவர் ஒருவர். அவரது பரம்பரையே இப்பொழுது மெய்கண்ட சந்தானமாக நம் தமிழகத்தில் நன்கு விளங்கிவருகிறது, சனற்குமார முனிவர் மரபின்படி நோக்கும்போது, அகச் சந்தானுசாரியார் நால்வர், புறச் சந்தானுசாரியார் நால்வர் என்று மரபு வழி சொல்லப்படுகின்றது. அகச் சந்தானுசாரியார் எப்பொழுதும் திருக்கைலேயிலேயே இருப்பவர்கள். அவர்கள், நந்தி தேவர், சனற்குமார முனிவர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதி மாமுனிகள் என்னும் நால்வருமாம், புறச்சந்தானுசாரியர், திருக்கைலேயில் செய்யப்பட்ட உபதேசத்தை நிலவுலகத்தில் பரவச் செய்தவர்கள். அவர்கள் மெய்கண்டார், அருள்நந்திசிவாச்சாரியார், மறை ஞான சம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் என்பவர். எனவே நிலவுலகில் உள்ள சந்தான குரவரில் முதலாசிரியராய் விளங்குபவர் மெய்கண்ட தேவரே என்பது நன்கு விளங்குகிறது. இவர் அகச் சந்தானுசாரியருள் நான்காமவராகச் சொல்லப்பட்ட பரஞ்சோதி மாமுனிகள்பால் உபதேசம் பெற்றவர். இவர் அருளிச் செய்ததே, சைவ சித்தாந்தத் தலை மணி நூலாய்

விளங்குகின்ற சிவஞான போதம். இவரது வரலாறு திருவருட் செயல் நிரம்பியது.

தமிழகத்தில் திருமுனைப்பாடி நாடு என்பது ஒரு பகுதி. இது, சோழ நாடு, தொண்டை நாடு என்னும் இரண்டிற்கும் நடுவே இருப்பதால், நடுநாடு என்று சொல்லப்படுவது. இதன் தலைநகரம் இப்பொழுது திருக்கோயிலூர் என வழங்கும் திருக்கோவலூர். திருக்கோவலூர் சிவபெருமானது அட்ட வீரட்டங்களில் ஒன்று; அந்தகாசுரனைச் சங்கரித்த வீரச் செயலைக் கொண்டு விளங்குவது. அறுபத்துமூன்று நாயன்மார்களுள், மெய்ப்பொருள் நாயனரும், நரசிங்க முனையரைய நாயனரும் இத் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு திருமுனைப்பாடி நாட்டை ஆண்டனர். சங்க காலத்தில் திருமுனைப்பாடி நாடு மலையமான் திருமுடிக்காரிக்கு உரியதாய் இருந்தது. அதனல், இதற்கு மலையமான் நாடு என்ற பெயரும் உண்டு. மலையமான் நாடு என்பது மருவி மலாடு என வழங்கிற்று. சேதி நாடு என்ற மற்றொரு பெயரும் இதற்கு உண்டு.

திருமுனைப்பாடு நாடு, பழமையாகவே, பெரியோர் பலரைத் தோற்றுவித்த பெருமையுடையது. தேவாரம் அருளிச்செய்த மூவரில் திருநாவுக்கரசர், சுந்தரர் என்னும் இருவர் அவதரித்த நாடு திருமுனைப்பாடி நாடே; இதனைச் சேக்கிழார்,

“மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மை
திகழ் அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானல் நம்மளவோ பேருலகில்
சிறந்த திருமுனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு”

என்று வியந்து போற்றுகின்றார். இத்திருமுனைப்பாடு நாட்டில், திருப்பெண்ணகடம் என்பது ஒரு சிறந்த

திருத்தலம். திருநாவுக்கரசருக்குச் சிவபெருமான் இடபக்குறியையும், சூலக்குறியையும் பொறித்தருளிய தலம் இதுவே.

இத்திருத்தலத்தில் அச்சுதகளப்பாளர் என்னும் சைவ வேளாண் பெருமகனுர் ஒருவர் இருந்தார். இவருக்கு நீரும், நிழலும் நிலம் பொதியும், நெற் கட்டும், பேரும், புகழும், பெருவாழ்வும் ஆகிய செல் வங்கள் மிக இருந்தும் மக்கட் செல்வம் இல்லாதிருந் தது. அதனுல், இவர் நோன்புகள் பல நோற்றும், அறங்கள் பல செய்தும் இறைவனை வேண்டியிருந்தார். ஆண்டுகள் பல சென்றும் மகப்பேறு வாய்த்திலது. அதனுல் வருத்தமுற்ற அச்சுத களப்பாளர், தம் குலத் துக்கெல்லாம் குருவாகிய திருத்துறையூர்ச் சகலாகம பண்டிதராகிய சிவாசாரியரை அடைந்து வணங்கித் தம் குறையைத் தெரிவித்துக்கொண்டார். சகலாகம பண்டிதர், 'உமது மகப்பேறு பற்றிய திருவருட் செயலை அறிவோம்' என்று சொல்லி, வழக்கப்படி தமது நித்திய கடன்களை முடித்துச் சிவபூசையையும் செய்து முடித்த பின்னர்த் தேவாரத் திருமுறையைப் பூசித்து அதில் அச்சுத களப்பாளரைக் கயிறு சாத்தும் படி சொல்ல, குரு ஆணையின்படி அச்சுத களப்பாளர் திருமுறையில் கயிறு சாத்தினுர். அப்பொழுது திரு ஞானசம்பந்தரது தேவாரத்தில் அரியதொரு திருப் பாடல் உதயமாயிற்று.

'பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினேடு
உள்ளம் நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு
முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாம்
தீவினையே'

என்பதே அத்திருப்பாடல், 'கண்காட்டு நுதலானும்'

என்னும் திருவெண்காட்டுத் திருப்பதிகத்தில் இரண்டாவதாய் உள்ள இத்திருப்பாடல் அச்சுத களப்பாளரது மனக்குறை பற்றிய தீர்வினைத் தெளிவாக அறிவிப்பதாய் இருத்தல் கண்ட சகலாகம பண்டிதர் அகம் மிக மகிழ்ந்து, 'திருவெண்காட்டுக்குச் சென்று அங்குள்ள முக்குள நீரில் முழுகி நாள்தோறும் திருவெண்காட்டுப் பெருமானை வணங்கினுல் உமக்கு மகப்பேறு உண்டாதல் உறுதி' என்று கூறினர்.

அச்சுத களப்பாளர் அங்ஙனமே தம் மனைவியாருடன் திருவெண்காட்டிற்குச் சென்று முக்குள நீரில் முழுகித் திருவெண்காட்டுப் பெருமானை வழிபட்டிருந்தார். ஒரு நாள் இரவு அவரது கனவில் சிவபெருமான் தோன்றி, 'அன்பனே, உனக்கு இப்பிறப்பில் மகனைப் பெறும் புண்ணியம் இல்லை; ஆயினும் ஞானசம்பந்தனது வாக்குப் பொய்யாதவாறு, அவனைப் போலவே ஒரு மகனை உனக்குத் தருகின்றோம்' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர். அச்சுத களப்பாளர் விழித்தெழுந்து, வியப்பும், அச்சமும் எய்தி நிகழ்ந்ததை மனைவியாருக்கும் தெரிவித்து, முன்போலவே திருவெண்காட்டீசரை வழிபட்டிருந்தார். இறைவன் திருவாக்கின்படியே அச்சுத களப்பாளர் தம் மனைவியார் வயிறு வாய்ப்ப, அதனையறிந்து திங்கள்தோறும் செய்தற்குரிய சடங்குகளை முறையே செய்துவரப் பத்தாந் திங்களில் நல்லதொரு நாளில் அம்மையார் அரியதோர் ஆண்மகவைப் பெற்றார்.

அச்சுத களப்பாளர் அளவிலா மகிழ்ச்சியடைந்து சாதகன்மம் முதலியவைகளைச் செய்து, 'சுவேதவனப் பெருமாள்' (வெண்காட்டிறைவன்) என நாமகரணம் செய்து, பலர்க்கும் தானங்கள் பல வழங்கிப் பெண்ணுகடம் அடைந்து திருமகனாரை மிகச் சீரும் சிறப்புமாக

வளர்த்தார். சுவேதவனப் பெருமாளுக்குத் தாய் மாமனார் திருவெண்ணெய்நல்லூரில் வாழ்பவர். அவர் தம் உடன் பிறந்தாளுக்கு அருமையாய்ப் பிறந்த ஆண் மகவைத் தாயுடன் தம் இல்லத்துக்குக்கொண்டு சென்று வளர்த்தார்.

சுவேதவனப் பெருமாள் சாமுசித்தராய் அவதரித்த காரணத்தால் மற்றைய குழந்தைகள்போல ஓடியும், ஆடியும், சிறு குறும்புகள் செய்தும், மழலை மொழி பேசியும் வளராமல் உலகத் தொடர்பே இன்றி மௌன நிலையிலே வளர்ந்தார். எனினும் அவர் ஊமையராய் இல்லை. உலகியலுக்கு வேறுபட்டுத் தோன்றிய காரணத்தால், பெற்றோரும், மற்றோரும் சிறிது மனக்கவலையுற்று, சுவேதவனப் பெருமாளைத் திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையாரது திருமுன்பில் கொண்டுபோய்விட்டு வேண்டிக்கொண்டனர். சுவேதவனப் பெருமாளும் பொல்லாப் பிள்ளையாரை வழிபட்டு மௌன நிலையில் இருந்தார்.

அவ்வாறு இருக்கையில், திருக்கையிலையிலிருக்கும் பரஞ்சோதி மாமுனிகள் பொதிகை மலையிலுள்ள அகத்திய முனிவரைக் காண வேண்டிவான் வழியாகச் சென்றார். அப்பொழுது, திருவெண்ணெய் நல்லூருக்கு அருகே வரும்பொழுது அங்குச் சாமுசித்தர் ஒருவர் இருப்பதை அறிந்து கீழே இறங்கி வந்து, தமக்கு நந்திதேவர் வழியிற் கிடைத்த உபதேசத்தைச் சுவேதவனப் பெருமாளுக்குச் செய்து, மெய்கண்டார் என்று தீட்சா நாமம் சூட்டிச் சென்றார். மெய்கண்டார் என்பது, பரஞ்சோதி மாமுனிகட்கு ஆசிரியர் பெயராகிய, சத்திய ஞான தரிசினிகள் என்பதன் மொழி பெயர்ப்பேயாகும்.

மெய்கண்டார் நந்தி பரம்பரை உபதேசத்தைப் பெற்று, அதனைப் பொல்லாப் பிள்ளையார் திருமுன்பி லிருந்து சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடிச் சிவானு பூதிச் செல்வராய் விளங்கினர். திருஞான சம்பந் தரைப் போலவே மெய்கண்டார் ஈராண்டிலே சிவ ஞானம் பெற்றுயர்ந்த நிலையைக் கண்ட பெற்றோரும், மற்றோரும் பெருமகிழ்ச்சியுற்றனர். பின்னர் மெய் கண்டார் தமிழுலகம் உய்ய வேண்டிச் **சிவஞான போதம்** என்னும் அரிய நூலை அருளிச் செய்து, அதற்கு வார்த்திகப் பொழிப்பும் உரைத்தருளி மாணாக்கர்களுக்கு அது வாயிலாகச் சிவஞானத்தை விளக்கிச் சைவ சித்தாந்த ஞானபானுவாய் விளங் கினர்.

இஃது இவ்வாறு இருக்கையில் அச்சுத களப்பாளர் குல குருவாய் முன்னர்த் திருமுறையில் கயிறு சாத்து வித்த திருத்துறையூர்ச் சகலாகம பண்டிதர் என்னும் சிவாசாரியர் தம் மாணாக்கர் அச்சுத களப்பாளருக்குத் தாம் சொல்லியவாறே ஆண் மகவு பிறந்து சிறப் பெய்தி இருந்தும் தம்மை வந்து வணங்கவில்லை என்று மனத்தில் சிறிது மாறுபாடு கொண்டு, சைவ வேளாண் மக்கள் இல்லத்திற்குச் சிற்சில வேளை களில் தாமே செல்வதுபோலத் திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்றார். பலர் அவரை எதிர்கொண்டு வணங்கினர்கள். அப்பொழுதும் மெய்கண்டார் அங்கு வாராமையைக் கண்டு தாமே அவர் இருக்கும் பொல்லாப் பிள்ளையார் சந்நிதிக்குச் சென்றார். அங்கு மெய்கண்டார் இனிது வீற்றிருந்து மாணாக்கர்களுக்கு சித்தாந்தத்தை அருளிச் செய்துகொண்டிருந்தார். இருந்தவர் அங்ஙனமே இருந்ததன்றி எழுந்து வந்து தம்மை வணங்காமையைக் கண்ட சகலாகம பண்டிதர் சிறிது சினங்கொண்டு, அப்பொழுது மெய்கண்டார்

அருளிச் செய்துகொண்டிருந்த ஆணவ மலத்தின் இயல்பு பற்றி அவரை வினவுவாராய், 'ஆணவத்தின் சொரூபம் யாது' என்று சிறிது கடுமையாகக் கேட்டார். மெய்கண்டார் சகலாகம பண்டிதர் மீது தமது திரு நோக்கத்தைச் செலுத்தித் தமது சுட்டு விரலால் அவரையே சுட்டிக் காட்டினர். எனவே, 'உம்மிடத்தில் காணப்படுகிற இதுதான் ஆணவத்தின் சொரூபம்' என்பதே அதன் பொருள் என்பது சொல்ல வேண்டுவது இல்லை. மெய்கண்டாரது திருநோக்கத்தாலும், திருக்குறிப்பாலும் ஆணவ மலம் அடியோடு நீங்கப்பெற்ற சகலாகம பண்டிதர், 'இவரே நம்மை ஆட்கொள்ள வந்த குருமூர்த்தி' என்று நினைந்து அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, 'அடியேனது பிழையைப் பொறுத்து ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டினர்; அங்ஙனமே மெய்கண்டார் அவரைத் தம் மாணுக்கருள் முதல்வராகக் கொண்டு உண்மை ஞானத்தை அளித்து, அருள்நந்தி எனத் தீட்சா நாமமும் சூட்டித் தாம் அருளிய சிவஞான போத நூலை விரித்து வழிநூல் செய்யுமாறு கட்டளையிட்டருளினர். அங்ஙனமே அருள்நந்தி சிவாசாரியார் சிவஞானசித்தி என்னும் விரிந்த வழிநூலைச் செய்து, சிவஞானபோதத்தின் பொருளை யாவரும் இனிது விளங்கச் செய்தார். ஆகவே, அவர் வழியாக மெய்கண்ட சந்தானம் இந்நிலவுலகில் இன்றும் நின்று நிலவுகின்றது.

மெய்கண்ட தேவநாயனர் இங்ஙனம், திருவதிகை மனவாசகங் கடந்தார் முதலிய மற்றும் மாணுக்கர் பலர்க்குச் சிவஞானத்தை வழங்கி அவர்கள் வாயிலாகச் சித்தாந்த ஞானம் எங்கும் பரவச் செய்து, ஓர் ஐப்பசித் திங்கள் சுவாதி நட்சத்திரத்தில் சிவ

போகப் பெருவாழ்வு எய்தினர். மெய்கண்டாரது பெருமையை உணர்ந்து அவரைத் தியானிப்பவர்கட்கு இன்றும் ஐயம் திரிபுகள் அற்ற சிவஞானம் சிந்திப்பது திண்ணம்.

மெய்கண்ட தேவநாயனரது காலம் கி. பி. 13ம் நூற்ருண்டின் முற்பகுதியாகும்.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.

பன்னிரண்டு சூத்திரங்கள்

முதற் சூத்திரம்

அவன் அவள் அதுஎனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

இரண்டாவது சூத்திரம்

அவையே தானே யாய் இருவினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

மூன்றாவது சூத்திரம்

உளது இலதென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

நான்காவது சூத்திரம்

அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று அவை
சந்தித்தது ஆன்மா சகசமலத்து உணராது
அமைச்சரசு ஏய்ப்பநின்று அஞ்சவத் தைத்தே.

ஐந்தாவது சூத்திரம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந்து அறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமிஅருள்
காந்தம் கண்ட பசாசத் தவையே.

ஆறாவது சூத்திரம்

உணர் உரு அசத்துஎனின் உணராது இன்மையின்
இருதிற னல்லது சிவசத் தாம்என
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே.

ஏழாவது சூத்திரம்

யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்துஇல துஅறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா.

எட்டாவது சூத்திரம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்துஎனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

ஒன்பதாவது சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே

பத்தாவது சூத்திரம்

அவனே தானே யாகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

பதினோராவது சூத்திரம்

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

பன்னிரண்டாவது சூத்திரம்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே.

———

உ
திருச்சிற்றம்பலம்

சிவஞானபோதம் - உரை

மங்கல வாழ்த்து

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

முடிபு: மலைவில்லார் அருளிய பொல்லார் இணைமலர் நல்லார் புனைவர்.

பதப்பொருள்: கல் ஆல் நிழல்—கல்லால மரத்தின் நிழலின் கண் இருந்து; மலைவு இல்லார் மலைவுற்று வந்த மாணாக்கருக்கு அஃது இல்லாதபடி ஞானம் அருளிய பெருமான்; அருளிய உலகவர் வழிபட்டு உய்யுமாறு தோற்றுவித்த; பொல்லார்—பொல்லாப் பிள்ளையாருடைய; இணைமலர்—இரு திருவடியை; நல்லார்—சிவஞானிகளாகிய நல்லோர்; புனைவர்— தலைமேல் சூடி வழிபடுவர்.

விளக்கம்: மலைவாவது, ஒன்றினொன்று மாறுபடுகின்ற சமய நூல்களைப் பயிலுமிடத்துத் தோன்றும் ஐயம் திரிபு. ஞானாசிரியனுடைய அறிவுரையாலன்றி மலைவு தீர்தற்கு வாயில் இல்லாமையால், சிவபரம் பொருளே கல்லால மரத்தின் கீழிருந்து ஆசிரியர் கோலத்தில் தோன்றி, சனகாதி நால்வருக்கு ஞான விளக்கம் நல்கினார். இதனை, 'கல்லால் நிழல் மலை வில்லார்' என்கிறார். தாம் ஒரு ஞானநூல் எழுதுகின்றாராதலின், ஆசிரியர் ஞானம் நல்கிய பரம் பொருளைக் காப்புச் செய்யுளில் குறிப்பிடுகின்றார்.

'நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ'

என்று சனகாதி முனிவர்க்குப் பெருமான் அறமுரைத்ததை மாணிக்கவாசக அடிகளின் வாக்கால் உணரலாம்.

'பொள்ளார்' என்றது, 'பொல்லார்' எனத் திரிந்தது. பொள்ளார் என்பது, உளியினால் செதுக்கப்படாது தானே தோன்றியவர் என்னும் பொருளது. திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளிய விநாயகப் பெருமானது பெயர் பொல்லாப் பிள்ளையார் என்பது. ஆசிரியர் மெய்கண்டார் ஞானம் பெற்ற இடம் திருவெண்ணெய்நல்லூராதலின், அங்கு எழுந்தருளிய விநாயகப் பெருமானை வழிபடுகின்றார். சிவபரம்பொருள் விநாயகப் பெருமானை அருளிச் செய்தது கயமுகாசுரனை அழித்தருளும் பொருட்டு என்பது புராண வரலாறு.

'இணைமலர்' என்றது, விநாயகப் பெருமானது திருவடி இரண்டையுமாம். அவை ஞானம் கிரியை என்பன. ஞானத்தால் உலகத்தை நோக்குவதும், கிரியையால் அதனை நடத்துவதும் ஆகிய இரண்டும் நடைபெறுகின்றன. இது பற்றியே திருவடி இரண்டினையும் 'இணைமலர்' என்று குறிக்கின்றார்.

மக்கள் பெறும் நலன்களுள் சிவஞானத்தின் மிக்க நலம் ஒன்று இல்லை; ஆதலின், சிவஞானம் பெற்றாரை, 'நல்லார்' என்று உரைக்கின்றார். திருவடியை 'மலர்' என்றதற்கேற்ப வழிபடுவர் என்னாது, 'புனைவர்' என்கிறார். ஏ, அசை.

கருத்து: ஞானியர் விநாயகரது திருவடியைப் புறத்தே தலைமீதும் அகத்தே நெஞ்சத்தும் வைத்து வழிபட்டுத் தமது ஞானவாழ்வை நடத்துவர் என்பது கூறப்பட்டது.

முதற் சூத்திரம்

அவன் அவள் அதுஎனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

முடிபு: அவை மூவினைமையின் தோற்றிய திதியே; ஒடுங்கி மலத்துளதாம்; அந்தம் ஆதி என்மனார் புலவர்.

பதப்பொருள்: அவன் அவள் அது எனும் அவை – ஆண்பாலும் பெண்பாலும் ஒன்றன்பாலுமாகப் பகுக்கப்பட்ட உலகுயிர்த் தொகுதி; மூவினைமையின் – தோன்றல் நிற்றல் அழிதல் ஆகிய முத்தொழில் உடையதாக இருப்பதால்; தோற்றிய திதியே – ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருளேயாம்; ஒடுங்கி மலத்து உளதாம் – அத்தொகுதி ஒடுங்கி மலம் காரணமாக மீளவும் உளவாம்; அந்தம் ஆதி – ஒடுங்குதற்குக் காரணமாக இருந்த அப்பரம்பொருளே மீளத் தோன்றுதற்கும் காரணமாகவுள்ள முதலாம்; என்மனார் புலவர் – என்று சொல்லுவர் அறிஞர்.

விளக்கம்: உலகிலே காணப்பட்ட எல்லாப் பொருள்களும் 'அவன் அவள் அது' என்ற முப்பிரிவில் அடங்கும். அவன் அவள் என்றது, உயர்திணைப் பொருளையும், அது என்றது, அஃறிணைப் பொருளையும் குறிக்கும். மக்கள் தேவர் உயர்திணை; அவரொழிந்த விலங்கு முதலிய உயிருடைப் பொருளும் நிலம் நீர் முதலிய உயிரில்லாப் பொருளும் அஃறிணையாம். உயிர்ப் பொருளும் அதற்குரிய உடம்பும், உலகமும் அடங்க 'அவை' என்று கூறுகின்றார். இவ்வரிக்கு உரை எழுதுவார் போன்று ஆசிரியரது முதல் மாணாக்கராகிய அருள் நந்தி சிவம்,

'ஒருவனோடு ஒருத்தி ஒன்றுஎன்று
உரைத்திடும உலகம் எல்லாம்'

என்று சிவஞான சித்தியாரிலே கூறுகிறார்.

'மூவினைமை', முன்னர்க் கூறப்பட்ட உலகுயிர்த் தொகுதிகள் தோற்றம் இருப்பு ஒடுக்கம் ஆகிய மூன்று தொழிலையும் உடையதாதல். ஆணும் பெண்ணுமாகிய மக்கள் பிறந்து சிலவோ பலவோ ஆண்டுகள் இருந்து பின்னர் மடிவது காணக்கிடக்கிறது. இது போன்று ஏனைய எல்லா உயிரும் உடம்பொடு தோன்றி நின்று மறைகின்றன. இனி, நிலம் நீர் முதலிய உயிரில்லாப் பொருள்களும் தோன்றி இருந்து மறைவதும் அறியப்படுகின்றது. லெமூரியா கண்டம் பாரதத்தின் தென் பகுதியில் இருந்ததும், பின்னர் அதனைக் கடல் கொண்டதும் நூல்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றன. எனவே, முத்தொழில் உடைத் தாதல் உலகுயிர்த் தொகுதியின் தன்மை என்பது புலனாகிறது. ஆதலின் ஆசிரியர், 'அவை மூவினை மையின்' என்று கூறுகிறார்.

இனி, நாற்காலி குடம் முதலிய பொருள்களில் தோற்றம் இருப்பு அழிவு ஆகிய மூவினைமை காணப் படுகின்றது. இவை செய்யப்பட்ட பொருள்கள் - செயற்கைப் பொருள் - என்பதும், இவற்றைச் செய்வ தற்குக் கருத்தா உண்டு என்பதும் உணரப்படுகின் றன. அதுபோல முத்தொழிற்படுவதால் உலகுயிர்த் தொகுதியும் தோற்றுவிக்கப்பட்ட செயற்கைப் பொருள் என்பதும், அவற்றைத் தோற்றுவித்தற்கு ஒரு கருத்தா உண்டு என்பதும் தானே போதரும். ஆதலால் ஆசிரியர், தோன்றிய என்னாது 'தோற்றிய' என்று கூறுகிறார். எனவே, முத்தொழிற்படும் உலகுயிர்த் தொகுதிக்கு ஒரு முதல்வன் வேண்டும் என்பதாம். வழிநூலாசிரியராகிய அருள்நந்திசிவம்,

'வருமுறை வந்துநின்று போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும்'

என்கிருர்.

தோற்றுவிக்கப்பட்ட உலகுயிர்த் தொகுதி அப்படியே அழிந்தே ஒழியாது, ஒடுங்கி மீளத் தோன்றுவானேன்? உயிர்களை அனுதியே பற்றியிருக்கிற மல இருளைப் போக்குதற் பொருட்டு உடம்பும் உலகமும் படைக்கப்பட்டன. மல இருள் நீங்குதற்குரிய பக்குவம் உயிர் எய்துவதற்குள், உடம்பும் உலகமும் நிற்க மாட்டாது அழிந்து விடுகின்றன. ஏனெனில், அவை செயற்கைப் பொருளே தவிர உயிர் போல இயற்கைப் பொருள் அல்ல. மேலும், மல நீக்கத்துக்குத் துணை புரிவன உடம்பும் உலகும் தவிர வேறு பொருளும் இல்லை. அதனுல் அவை மீளவும் உளவாதல் வேண்டியுள்ளன. ஆதலின், 'ஒடுங்கி மலத்து உளதாம்' என்கிருர். 'அவன் அவள் அது எனும் அவை' உளவாதற்குக் காரணம் மலம் என்பதாம்.

மலம் என்பது, அறிவு வடிவாகிய உயிரோடு அனுதியே கலந்து அறியாமையைச் செய்வதோர் இருள். அது செம்பிற் களிம்பு போலவும், ஒளிக்குள் இருள் போலவும் உயிரோடு ஒன்றியிருப்பது. அறிவு வடிவான உயிரோ எப்பொழுதும் நேர்மை தவருமல் தூய வழியில் செல்லும் இயல்புடையது. இம்மலம் அறிவை மறைத்துக் குற்றத்துக்கு உள்ளாக்குகிறது.

"தூய நினைவைத் தூமொழியைத் தூய செயலைத்
தோற்ருது
தீய நினைவைத் தீமொழியைத் தீய செயலைத்
தவத்தோற்றும்
மாய ஆணவப் பகை"

என்று கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்தில் கூறுகின்றார். அஃது எப்படி எனில், நிகழ்ந்ததை மறக்கச் செய்வதும், நிகழப் போவதை அறிய வொட்டாமல் மறைப்பதும் மலத்தின் செயல். அதனால் உயிர் அறிவு தடைப்பட்டுக் குற்றத்தைச் செய்கிறது.

இனி, ஒடுங்குகிற உலகத் தொகுதிக்கு ஒடுங்கும் இடம் யாது ? இடம் காலம் என்பன, உலகுக்கேயன்றி உலகுக்கு அப்பாற்பட்ட இடத்தில் இல்லை. இக்கால விஞ்ஞான நூல்களும் நிலவுலகுக்கு அப்பாற்பட்ட பகுதியில் காலம் இடம் என்பன இல்லை என்று கூறுவது நினைவுகொள்ளத் தக்கது. ஆனால் அவை ஒடுங்குதற்கு இடம் வேண்டும். அவ்விடத்தை 'ஒடுங்கி' என்றும், அவை மீளத் தோன்றும் போது அவ்வொடுங்கியினின்றும் உளவாம் என்றும், ஒடுங்கியைப் பெயராக்கிப் பொருள் கூறுவர் சிவஞான முனிவர்.

உலகத் தொகுதியை ஒடுக்குபவனும் அவற்றை மீளத் தோற்றுவிப்பவனும் ஒருவனே ஆகும். அது பற்றியே அவனை, 'அந்தம் ஆதி' என்று கூறுகின்றார். அந்தத்தைச் செய்யும் பெருமானே ஆதியாகவும் உள்ளான் என்ற கருத்துப் புலப்பட, 'அந்தம் ஆதி' என்று கூறிய நயம் அறிந்து போற்றத்தக்கது. அருள்நந்திசிவம், 'தான்முதல் ஈறு மாகி' என்றதையும் ஒப்ப நோக்குக. உலகத் தொகுதிக்குப் படைத்தலையும் அழித்தலையும் கூறினமையால், காத்தலையும் செய்வான் முதல்வன் என்பது சொல்லாமலே பெறப்படும். முதல்வனது படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய மூன்று தொழில்களும் உலகு உடம்புகளுக்கு உரியன என உணர்க. இனி, முதல்வனால் உயிருக்குச் செய்யப்படுவன மறைத்தலும் அருளலு

மாம். படைத்தல் முதலிய ஐந்தையும் முதல்வனுடைய ஐந்தொழில் என்று ஞான நூல்கள் கூறும்.

இத்துணையும் தம் கூற்ருகக் கூருது, 'என்மனர் புலவர்' என்று முன்னோர் கூற்ருகக் கூறியது ஆசிரிய ரது பணிவையும் பெருமையையும் காட்டுகிறது.

கருத்து: உலகுயிர்த் தொகுதி தோன்றுதல் முதலிய முத்தொழில் உடையது என்பதும், அதற்கு முதல்வன் ஒருவன் உண்டு என்பதும், அவன் அத்தொழிலைச் செய்தற்குக் காரணம் உயிரிடத்தே ஒன்றியிருக்கும் மலத்தை நீக்குதற் பொருட்டு என்பதும் கூறப்பட்டன.

———

இரண்டாவது சூத்திரம்

அவையே தானே யாய் இருவினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

முடிபு : அவன் அவள் அது எனும் அவை, இருவினையின் போக்குவரவு புரிய, அந்தம் ஆதியாகிய முதல்வன், அவையே யாய், தானேயாய், அவையே தானேயாய், ஆணையின் நீக்கமின்றி நிற்கும்.

பதப்பொருள் : இருவினையின் - முற் சூத்திரத்தில் அவன் அவள் அது என்று குறிக்கப்பட்டவற்றுள் உயிர்த்தொகுதிகள் தாம் செய்யும் இருவினை காரணமாக; போக்கு வரவு புரிய - இறத்தலும் பிறத்தலும் ஆகிய தொழில்களைச் செய்யா நிற்க ; அவையேயாய் - அந்தமாதியாகிய முதல்வன் உடம்பும் உலகுமாகிய பொருள்களோடு கலந்து ஒன்ருய்; தானேயாய் தான் அவற்றின் வேருய் ; அவையே தானேயாய் - உயிர்த் தொகுதியும் தானும் உடனுய் ; ஆணையின் - ஆணையாகிய சிற்சக்தியோடு ; நீக்கம் இன்றி நிற்கும் - நீங்குதல் இல்லாமல் இருப்பன்.

விளக்கம் : முதற் சூத்திரத்தில் அவை மலத்து உளதாம் என்ற ஆசிரியர், இச் சூத்திரத்தில் அவை இரு வினையின் போக்குவரவு புரிய' என்கிருர். வினை செய்தற்குரியன உயிர்களே யாதலின், உயிர்த் தொகுதி மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. உடம்பும் உலகமும் மல நீக்கத்தின் பொருட்டு உயிருக்குத் துணை செய்ய வந்தன.

மலம் காரணமாகப் பிறவியிற் செலுத்தப்பட்ட உயிர் வினையைச் செய்கின்றது. ஏன் எனில், வினை

யாலன்றி மலம் நீங்குதற்கு வழியில்லை. வினையால் மலநீக்கமும், மலநீக்கத்தால் ஞானமும் உண்டாகின்றன. இவ்வினை, நல்வினை தீவினை என இருவகைப்படும். இரண்டுமே பிறப்புக்குக் காரணமாம்.

'வினையின் வந்தது வினைக்கு விளைவாயது' என்று சாத்தனாரும் கூறுகிறார். நல்வினையும் தீவினையும் ஆகிய இரண்டும் பொன் விலங்கும் இருப்பு விலங்கும் போலத் தளை செய்வன. ஆதலின் திருவள்ளுவ நாயனார், இருவினையை, "இருள்சேர் இருவினை" என்கிறார். அவர் இருள் என்றது, மலத்தை. மாணிக்கவாசக அடிகள், 'அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி' என்றதும் இக்கருத்துப் பற்றியேயாம். உயிர்கள் வினைக்கேற்ப இறத்தலையும் பிறத்தலையும் செய்யும். ஆதலால், 'இருவினையின் போக்கு வரவு புரிய' என்கிறார்.

'அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்ல' என்று அருள்நந்திசிவம் கூறியதையும் ஒப்பிட்டுக் காண்க.

'ஞானமுடன் இச்சை தொழில் நண்ணியிட அதனால்,
நானுபோகங்களையும் நாடி நான் என்னும்
மானமதால் இருவினையும் வளர்ந்திடவே அதனால்,
வானமொடு பூமிகீழ் மருவிப் போந்தே'

என்று சிவாக்கிரக யோகியர் தாம் செய்த சிவநெறிப் பிரகாசத்தில் வினையால் பிறப்புப் பெருகுவதை விரிவாகக் கூறுகின்றார்.

முதற் சூத்திரத்தில் உண்டு என்று நிறுவப் பட்ட அந்தமாதியாகிய முதல்வன் எங்கே உள்ளான்? முதற் சூத்திரத்தில் அவை என்ற சொல்லால் குறிக்கப் பட்ட உயிர்ப் பொருள் உயிரில் பொருளாகிய

இரண்டனுள், உயிரில் பொருளில் முதல்வன் ஒன்றாய் இருக்கின்றான். அதனால், "அவையேயாய்" என்று கூறுகிறார். உயிர்ப் பொருளோடு எங்ஙனம் உள்ளான் எனில், உயிர்ப் பொருளோடு 'உடனாய்' இருக்கின்றான். இதனை, 'அவையே தானேயாய்' என்று கூறுகிறார். இவ்விரண்டுமின்றி வேறு தனிநிலை முதல்வனுக்கு இல்லையோ என்ற ஐயம் நிகழா வண்ணம், இவ்விரண்டின் **வேறாய்த்** தனித்தும் இருக்கும் நிலை உண்டு என்பதை உணர்த்த 'தானேயாய்' என்றும் இச் சூத்திரத்தில் முதல்வன் இருக்கும் இடம் கூறுகிறார். முதல்வன் இவ்வாறு ஒன்றாயும் உடனாயும் வேறாயும் இருப்பதற்குக் காரணம் உண்டு. ஓர் ஒழுங்குக்கும் அளவுக்கும் வரம்புக்கும் உட்பட்டு இருக்கும் பொருட்டே உயிரில்லாத உலகியல் பொருளோடு கலந்து ஒன்றாய் இருக்கிறான். இங்ஙனம் இல்லாவிடில் உயிர்கட்கு வாழ்வு இல்லை ; ஞானமும் விளையாது. உயிர்ப் பொருளுக்கு வினைப்பயனை ஊட்டும் பொருட்டும், மலத்தால் மறைப்புண்டிருத்த லால் அவ்வப்போது உணர்வு நல்கும் பொருட்டும், அவ்வுயிர்களோடு உடனாய் இருக்கிறான். இனி, உலகுக்கு அந்தத்தைச் செய்யும் பொருட்டும் மீளவும் படைத்தற் பொருட்டும் வேறாய் இருக்கிறான். 'அவையே தானேயாய்' என்றது, அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் என்று விரித்துப் பொருள் கொள்ளப்பட்டது.

'ஒருவனே எல்லாமாகி அல்லனாய் உடனுமாவன்' என்ற சித்தியாரையும் காண்க.

'ஈறாய்முதல் ஒன்றாய் இருபெண்ணாண் குணம்மூன்றாய்
மாறா மறைநான்காய் வருபூதம் அவைஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையோ டெட்டுத் திசைதானாய்
வேறாய் உடன்ஆனான் இடம் வீழிம்மிழலையே'

என்ற திருஞானசம்பந்தரின் அருள்வாக்கினுலே முதல்வன், ஈருய் வேருய் உடனுய் இருக்கிருன் என்பதை உணரலாம்.

முதல்வன் இருவினைப் பயனை நேரே உயிர்கட்கு ஊட்டாது ஆணையாகிய தனது சிற்சக்தியால் ஊட்டு கிருன். வினையோ அறிவில்லாதது ; உயிரோ தான் செய்த வினைப்பயனை அறிந்து ஏற்றுக்கொள்ளாது. ஆதலால் இவ்விரண்டையும் சேர்த்து நுகர்விப்பது ஆணையேயாம். ஆணை என்பது, முதல்வனது சிற் சக்தியே. முதல்வன் வேறு ; சக்தி வேறு என்பது அல்ல. நெருப்பும் அதன் சுடுதல் சக்தியும், சூரியனும் அதன் ஒளியும் போன்று, ஒன்றினென்று பிரிக்க முடியாதது. ஆதலின், 'ஆணையின் நீக்கமின்றி நிற்கும்' என்கிருர்.

கருத்து : முதல்வன் ஆணையோடு நின்று உயிர் கட்கு இருவினைப் பயனை நுகர்விப்பன் என்பது கூறப்பட்டது.

———

மூன்ருவது சூத்திரம்

உளது இலதென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

முடிபு: மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது.

பதப்பொருள்: இலது என்றலின் ஆன்மா உளது — உள்பொருள் ஒன்றுக்குத்தான் உண்டு அல்லது இல்லை என்று சொல்லும் வழக்கு உண்டு ஆதலால் இலது என்ற விடத்து ஆன்மா உள்ளது; எனது உடல் என்றலின் ஆன்மா உளது—உடம்பை வேருக வைத்து எனது உடல் என்று உடையதும் உடைமையுமாகக் கூறுதலால் உடம்புக்கு வேருய் உடையதாகிய ஆன்மா உள்ளது; ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது—ஐம்புலன்களையும் ஐம்பொறிகளின் வாயிலாகக் கவர்ந்து அறியும் ஆன்மா அவ்வைம் பொறிகளுக்கு வேருய் உள்ளது; ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது - கனவின்கண் கண்டவற்றை நனவின் கண் உரைப்பதால் அக்கனவைக் கண்டறிந்து உரைக் கும் ஆன்மா வேருய் உள்ளது; கண்படில்--கனவில் லாத துயிலின்கண்; உண்டிவினை—இன்பதுன்ப நுகர்ச்சியும் உடம்பின் இயக்கமும்; இன்மையின் ஆன்மா உளது—இல்லாமையால் ஆன்மா உள்ளது; உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது — தானே உணராது மற்ருென்று உணர்த்த உணர்தலின் அவ் வுணர்த்தும் பொருளுக்கு வேருய் ஆன்மா உள்ளது; மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது — மாயா காரியமாகிய உடம்பின்கண் ஆன்மா உள்ளது.

விளக்கம் : முதற் சூத்திரத்தில் முதல்வனது உண்மையைக் கூறி, இரண்டாவது சூத்திரத்தில் வினையைப் பற்றிக் கூறி, மூன்ருவது சூத்திரத்தில் வினைப்பயனை அனுபவித்தற்குரிய ஆன்மா உண்டு என்று நிறுவுகிருர். உயிரை ஆன்மா என்பது, வைதிக சமய நூல் வழக்கு.

ஆன்மா என்ற பொருளைக் காணமுடியவில்லை, ஆதலின் அது இல்லை என்று கூறுவர் ஒரு சாரார். ஆனல், ஒரு பொருள் உளதானலன்றி இலது என்னும் சொல்லுக்கு இடம் இல்லை. ஆகவே, இல்லை என்ற இடத்து, இவ்விடத்தில் இக்காலத்தில் இல்லை என்று பொருள்படுமேயன்றி, எவ்விடத்திலும் எக்காலத்தி லும் இல்லை என்று பொருள் படாது. இல்லை என்ற சொல் வழக்கு உள்பொருளுக்கே யன்றி இல்பொரு ளுக்கு இல்லை. ஆகையால், 'இலது என்றலின் ஆன்மா உளது' என்று கூறுகிருர். ஆன்மா உளது என்று கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது. பின்வரும் ஏதுக் களுக்கும் இவ்வாறே கொள்க.

உடம்பே ஆன்மா என்பர் இன்னெரு சாரார். உடம்புக்கு வேருய் ஆன்மா என ஒன்று வேண்டா என்பது அவரது கொள்கை. ஆனல், எனது உடல் என்றபோது உடைமையாகிய உடம்புக்கு வேருய் எனது என்ற சொல்லுக்குப் பொருளாய் ஒன்று உள்ளது. எனது என்ற சொல்லுக்குப் பொருளா யுள்ள அதுவே ஆன்மா. ஆதலின், 'எனதுடல் என்றலின் ஆன்மா உளது' என்று சொல்லுகிருர்.

மற்றெரு சாரார் ஐம்பொறிகளே ஆன்மா என்பர். உடம்பிலே புறப்பொருளைச் சென்று பற்றி மனத்துக் குக் கொடுக்கக்கூடிய கருவிகள் மெய் வாய் கண் மூக்குச்

செவி என்பன. ஆதலின் இவற்றுக்கு வேருய் ஆன்மா என்ற ஒன்று இல்லை என்பர். ஆனல் இக்கூற்றும் பொருந்தாது. கண் முதலிய ஐம்பொறிகளும் உயிராக இருக்குமாயின், இவை யாவும் ஒரு தொழிலைச் செய்ய வேண்டும். ஆனல் அவை வேறு வேறு தொழிலைச் செய்கின்றன. கண் ஒளியைப் பார்க்கிறது; காது ஒலியைக் கேட்கிறது; மூக்கு மணத்தை நுகர்கிறது; நா சுவையை அறிகிறது; மெய் ஊற்றினை உணர்கிறது. கண் ஒளியைப் பார்க்குமே தவிர ஓசையைக் கேளாது; காது ஓசையைக்கேட்குமே தவிர மணத்தை நுகராது. இவ்வாறு ஒரு கருவி பற்றுகிற புலனை மற்றொரு கருவி பற்ருது. ஆதலின் இக்கருவிகள் யாவும் உயிராகா. இவற்றைப் பயன்படுத்திக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் பொருள் ஒன்று வேருய் உள்ளது, அதுவே ஆன்மாவாகும். ஆகவே 'ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது' என்கிருர்.

கனவு நிலையில் செயல்படுவது சூக்கும உடம்பு; ஆதலின் அச்சூக்கும உடம்பே ஆன்மா என்பர் பிறிதோர் சாரார். விழிப்பு நிலையிலிருந்து கனவு நிலைக்குச் செல்லும்போது கண் முதலிய கருவிகள் செயற்படுவதில்லை. எனினும் கனவில் காட்சி செயல் முதலிய நிகழ்கின்றன. அந்நிகழ்ச்சிகளைக் கண்டறிந்து நனவின்கண் உரைப்பது ஒன்று உள்ளது. அதுவே ஆன்மா; ஆதலின் 'ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது' என்கிருர். ஒடுக்கம் என்றது கனவு நிலையை. 'ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின்' என்ற தொடரை, ஐம்புலன் அறிதலின் ஒடுக்கம் அறிதலின் என்று இரு தொடராக்கிப் பொருள் கொள்ளப் பட்டது.

இனி, பிராணவாயுவே ஆன்மா என்பர் வேறோர் சாரார். பிராணவாயு உடம்பில் இருந்தால் ஆன்மா இருப்பதாகவும், அது இல்லை என்றால் ஆன்மா இல்லை என்றும் கருதப்படுவதே அதற்குக் காரண மாகும். விழிப்பு நிலையிலும் துயில் நிலையிலும் பிராண வாயுவின் இயக்கம் உள்ளது. பிராணவாயுவே ஆன் மாவாக இருக்குமாயின் விழிப்பு நிலையில் இருக்கின்ற இன்பத்துன்ப உணர்ச்சிகள் துயில் நிலையிலும் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லையாதலின் பிராண வாயு ஆன்மாவாகாது, மேலும் யோகப்பயிற்சியினால் பிராணவாயுவைக் கட்டுப்படுத்தியும் விட்டும் பழகுவது காணப்படுகிறது. ஆதலின் பிராண வாயுவுக்கு வேறாய் ஆன்மா ஒன்று உளதாம். எனவே, 'கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளது' என்று கூறுகிறார்.

பிரமப்பொருள் ஒன்றே எல்லா உடம்புகளிலும் உள்ளது. வானத்தில் உள்ள சூரியனது உருவம் நிலத்தின் கண்ணே நீர் நிரம்பிய பல குடங்களிலும் காணப்படும். அது ஒவ்வொன்றும் சூரியனே யாதல் போல, எங்கும் நிறைந்து ஞானமயமாய் விளங்கும் பிரமப் பொருள் ஒன்றே எல்லா உடம்பிலும் ஆன்மா வாக இருக்கின்றது என்பர் ஒரு பகுதியினர். உடம்பில் உள்ள ஆன்மாவோ அறியாமையுற்றுப் பிறர் அறிவிக்க அறியும் இயல்பினதாய் இருப்பது. பிரமமோ.எனில், முழுத்த ஞானமேயானது. ஆகவே ஆன்மா பிரமப் பொருளுக்கு வேறாய்ச் சிற்றறிவுடையதாக இருப்ப தால், 'உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது' என்று கூறுகிறார்.

இங்ஙனம் உண்டு என நிறுவப்பட்ட ஆன்மா உடம்பினுள் உள்ளது. அவ்வுடம்பின் இயல்பை,

'மாயா இயந்திர தனு' என்கிருர். முதற் சூத்திரத்தின்கண் பாசத்தின் கூறுகளாகிய மலத்தைக் கூறி, இரண்டாவது சூத்திரத்தில் வினையைக் கூறி, மூன்ருவது சூத்திரத்தில் மாயையைக் கூறுகின்ருர். மலம் கன்மம் மாயை ஆகிய மூன்றும் பாசம் எனப்படும்.

மாயை என்பது, உயிரில் பொருள்களாகிய நிலம் நீர் தீ முதலியன ஒடுங்குங்கால் ஒன்றினுள் ஒன்ருய் ஒடுங்கி அணுவாய்ச் சக்தியாய் மாறும். அச்சக்தி மாயை எனப்படும். மீளத் தோன்றுங்கால் மாயை அணுவாகி, அணு தன்மாத்திரையாகி, தன்மாத்திரை பூதமாகி, பூதம் இவ்வகண்ட உலகமாய்க் காட்சி அளிக்கும். இப்பூதங்களும் பால் தயிராவதுபோலப் பரிணமித்து, அந்தக்கரணமும், கலைத்தொகுதியும் தன்னுட்கொண்ட உடம்பாய் விளங்கும்.

தன்மாத்திரையாவன, நிலம் முதலிய ஐம்பூதங்கட்கும் காரணமான நுண் அணு.

பூதமாவன, நிலம் நீர் தீ காற்று விண் என்பன.

அந்தக்கரணமாவன, மனம் சித்தம் அகங்காரம் புத்தி என்பன.

கலையாவன, கலை வித்தை அராகம் காலம் நியதி புருடன் மாயை என்பன.

இங்ஙனம் உயிரின் வேருகிய உடம்பும் உலகப் பொருளும் மாயையின் காரியப் பொருள் என்பதைக் காணலாம். மாயையால் ஆகிய ஐம்பூதப் பரிணமம் உடம்பு ஆதலின், இதனை 'மாயா இயந்திர தனு' என்கிருர்.

இவ்வுடம்பிலிருந்து ஆன்மா என்ன செய்கிறது? 'எனது உடல் என்றலின்' உடம்பின் வேறாகிய ஆன்மா உடம்பைத் தனது எனத் தருக்கி அவ்வுடம்பின் துணைகொண்டு வினை செய்கிறது. 'ஐம்புலன் அறிதலின்' என்றலின், புறப்பொருளாகிய ஐம்பூதங்களின் உருவமாகிய உலகனைத்தையும் அறிவானும் அறியப்படும் பொருளுமாய் இருந்து அறிகிறது. 'ஒடுக்கம் அறிதலின்' என்றலின், பொருளை அகத்தே நுண்மையாக உணர்கிறது. 'கண்படில் உண்டிவினை இன்மையின்' என்றலின், கருவியோடு கூடியிருந்தும் செயலற்று ஓய்வு பெறுகிறது. 'உணர்த்த உணர்தலின்' என்றலின், தன்னால் அறிய மாட்டாதவற்றைப் பிற உயிர்களும் பொருள்களும் உணர்த்த உணர்கிறது. 'உளது இலது' என்றலின் உடம்புள் இருந்தும் இல்லாதது போலத் தோன்றுமாறு யோக முயற்சியால் சமாதி நிலை எய்துகிறது. உளதாகிய உயிர் இலது என்று சொல்லும் அளவுக்கு ஒடுங்குந்தன்மை உடையதாய் இருப்பதால்தான் இன்றைய மருத்துவ விஞ்ஞானத்துறை பெரிய பெரிய அறுவைகளைச் செய்வதற்கு வாய்ப்பாகவுள்ளது. 'மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா' என்றலின், உயிர் உடம்பை இத்துணைச் செயல்களுக்கும் கருவியாகப் பயன்படுத்துகிறது என்ற இக் குறிப்புப் பொருளும் இச் சூத்திரத்தின்கண் அறிய நிற்பதை உணர்க.

கருத்து : உயிரினது இருப்பும் இயக்கமும் கூறப்பட்டன.

———

நான்காவது சூத்திரம்

அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று அவை
சந்தித்தது ஆன்மா சகசமலத்து உணராது
அமைச்சரசு ஏய்ப்பநின்று அஞ்சவத் தைத்தே.

முடிபு: ஆன்மா அந்தக்கரணங்களில் ஒன்று அன்று; சகச மலத்தால் தானே உணராது; அமைச்சு அரசு ஏய்ப்பக் கரணங்களோடு சந்தித்து நின்று அஞ்சவத்தைத்தாம்.

பதப்பொருள்: ஆன்மா – ஆன்மாவானது; அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று – உட்கருவிகளாகிய மனம் சித்தம் அகங்காரம் புத்தி எனப்படும் நான்கில் ஒன்று அன்று; சகச மலத்து உணராது – உடன் நின்ற ஆணவமல மறைப்பால் அறிய மாட்டாமையால்; அமைச்சு அரசு ஏய்ப்ப – மந்திரியோடு கூடிய மன்னவன் போல; அவை சந்தித்து நின்று - உட்கருவிகளோடு கூடி உடற்கண் நின்று; அஞ்சு அவத்தைத்து – நனவு கனவு துயில் உறக்கம் பேருறக்கம் ஆகிய ஐந்து நிலைகளில் மேற்சொன்ன கருவி கரணங்களோடு கூடுவதும் பிரிவதுமாக இருக்கிறது.

விளக்கம்: முதல் மூன்று சூத்திரங்களில் பதி பாச பசு ஆகிய முப்பொருள் உண்டு என்று கூறி, இச்சூத்திரத்தில் பசுவின் இயல்பு கூறுகிறார்.

முற்சூத்திரத்தில் ஆன்மாவானது, உடல் புறக் கருவி பிராணவாயு முதலியவற்றுக்கு வேறாக உள்ளது என்று கூறினார். இங்கு உட்கருவிக்கும் வேறாக உள்ளது என்று கூறுகிறார். உட்கருவி யாவன, மனம் சித்தம் அகங்காரம் புத்தி என்பன. அவை உலகின் கூறாகிய பூதங்களுக்கும் தன் மாத்திரை

களுக்கும், உடலின் கூறுகளாகிய அறிகருவி செயற் கருவியாகிய பத்துக்கும் வேருய், அருவமாய், உடலின் உள்ளீடாய் இருப்பவையாம். மேலும் அவை முறையே ஒன்றினுள் ஒன்ருய், ஒன்றின் ஒன்று சிறந்திருக் கின்றன. புறத்தே கண் முதலிய புறக்கருவிகள் அறிந்து வந்த பொருளே, அகத்தே மனம் முதலிய உட்கருவிகள் சீர் தூக்கி ஆன்மாவுக்கு அளிக்கவல்லன. மனம் பொருளேப்பற்றும்; சித்தம் சிந்திக்கும்; அகங் காரம் சிந்தித்த பொருளே ஏற்று இது என் சிந்தனே, இது என் கருத்து எனத் தனக்கு உரியதாக்கிக்கொள் ளும்; புத்தி நிச்சயிக்கும். இவ்வாறு இவை நான்கும் உயிருக்குத் துணேபுரியும் கருவிகளேயன்றி அவை ஆன்மா ஆகா. ஆதலால், 'ஆன்மா அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று' என்று கூறுகிருர்.

ஆன்மா அறிவே வடிவமாக இருந்தபோதிலும், பொருளே உள்ளவாறு அறியமுடிவது இல்லே. அதற் குக் காரணம் அதனேடு பிரிப்பின்றி உடனிருக்கும் மலத்தின் மறைப்பேயாகும். இம்மலம் எப்பொழுது கூடியது என்பதற்கு இடமின்றி, பிரிவின்றி உடன் இருப்பதால் இதனே 'சகசமலம்' என்று குறிக்கிருர். அதனுல் மறைப்புண்டிருப்பது பற்றி, 'சகச மலத்தால் உணராது' என்று ஆசிரியர் கூறுகிருர். ஆதலின் ஆன்மா மனம் முதலிய உட்கருவிகளோடு கூடியே அறிகிறது. அது பற்றியே 'அவை சந்தித்து நின்று' என்கிருர். அரசன் அமைச்சரோடு கூடி அரசியல் காரியங்களேப் பார்ப்பதுபோல, ஆன்மா மனம் முதலிய உட்கருவிகளோடு கூடி உலகியல் பொருள்களே அறி கிறது. அரசன் அறிவுடையனுயினும் அமைச்சரின் அறிவுத் துணேயின்றி ஆட்சி நடத்தமுடியாது. அது போல ஆன்மாவும் அறிவுடையதாயினும் மனம்

முதலிய கருவிகளின் துணையின்றிப் பொருள்களை அறிய முடியாது. ஆதலின், 'அமைச்சு அரசு ஏய்ப்ப அவை சந்தித்து நின்று அறியும்' என்று கூறுகிறார்.

உட்கருவிகளோடு கூடி நிற்கும் ஆன்மா ஐந்து அவத்தைகளை எய்துகிறது என்கிறார் ஆசிரியர். ஐந்து அவத்தைகளாவன, நனவு கனவு துயில் உறக்கம் பேருறக்கம் என்னும் ஐந்து நிலைகளாகும். நனவு நிலையில் கண் முதலிய புறக் கருவிகள், மனம் முதலிய அகக் கருவிகள், பிராணவாயு முதலிய வாயுக்கள் ஆகியவற்றோடு கூடி ஆன்மா புருவ நடுவில் இருக்கும். அடுத்து, கனவு நிலையில் கண் முதலிய புறக் கருவிகளினின்றும் நீங்கி மனம் முதலிய உட்கருவிகளோடும் பிராணவாயு முதலிய வாயுக்களோடும் கூடிக் கண்டத்தில் நிற்கும். பின்னர் துயில் நிலையில் நெஞ்சத்துக்குச் செல்லும்போது சித்தமாகிய உட்கருவியோடும், பிராண வாயுவோடும் கூடி நிற்கும். அடுத்து உறக்க நிலையில் பிராணவாயு ஒன்றோடு உந்தித் தானத்தில் நிற்கும். இறுதியாகப் பேருறக்க நிலையில் பிராண வாயுவின் இயக்கமுமின்றி ஆன்மா தனித்து மூலாதாரத்தில் நிற்கும். இவ்வாறு ஆன்மா உடலின்கண் ஐந்து அவத்தைகளை எய்துவது இயல்பாக இருப்பதால் 'ஆன்மா அஞ்சவத்தைத்து' என்கிறார்.

இவ்வாறு கருவிகளை விட்டுக்கொண்டே கீழ் நோக்கி மூலாதாரத்தை அடைகிற ஆன்மா, மீண்டும் மேல்நோக்கி வருகிறபோது ஒவ்வொரு நிலையிலும் விட்ட கருவிகளோடு கூடி நனவு நிலையில் புருவ நடுவுக்கு வரும். ஆன்மா கீழ் நோக்கிச் செல்லும்போது கீழாலவத்தை என்றும், மேல் நோக்கி வரும்போது மேலாலவத்தை என்றும் கூறப்படும். ஆன்மா மூலாதாரத்துக்குச் சென்று தான் திரும்பும் என்பது

இல்லை. இடையிடையே மடங்கி மீள்வதும் உண்டு. இவ்வவத்தை அவ்வப்போது ஒவ்வொருவர் அனுபவத்திலும் காணப்படுவது.

அமைச்சு அரசு கூறியதனுல், அரசன் அமைச்சரோடு கூடி நின்று அரச காரியங்களை ஆராய்வதும் பிறகு தான் அந்தப்புறத்தில் தனித்து ஒடுங்குவதும் போல, ஆன்மா நனவின்கண் எல்லாக் கருவிகளோடும் கூடித் தனது அறிவு இச்சை செயல்களை ஆளுவதும், பிறகு அதீதத்தில் தனித்து நிற்பதும் செய்வதால் அவத்தைகளைக் குறிப்பிடுவது இன்றியமையாததாயிற்று.

கருத்து : அறிவன அறிந்து ஆவன செய்யும் ஆன்மா ஐவகை அவத்தை எய்தும் இயல்பு கூறப்பட்டது.

———

ஐந்தாவது சூத்திரம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந்து அறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமிஅருள்
காந்தம் கண்ட பசாசத் தவையே.

முடிபு: மெய் வாய் கண் மூக்குச் செவி, அளந்தறிந்தும், விளம்பிய உள்ளத்தை அறியா; ஆங்கு அவை போலத் தம் தமி அருள் தாம் உணர்வின் அறியா; அவை காந்தம் கண்ட பசாசம் போல.

பதப்பொருள்: மெய் வாய் கண் மூக்கு (செவி) – மெய் வாய் கண் மூக்குச் செவியாகிய ஐம்பொறிகள்; அளந்து அறிந்து – தத்தம் அளவில் புலன்களால் உலகப் பொருள்களைக் கண்டறிந்தும்; விளம்பிய உள்ளத்து – முற் சூத்திரங்களால் சொல்லப்பட்ட உயிரை; அறியா – அறிய மாட்டா; ஆங்கு அவை போல – அத்திறத்தில் அவ் வைம்பொறிகளைப் போல; தம் தமி அருள் – தம்மை இயக்குகின்ற முதல்வனது அருளை; தாம் உணர்வின் அளந்து அறிந்து அறியா – உயிர் (தம் அளவுக்குட்பட்ட உலகப் பொருளை அறிந்தும்) தம் உணர்வினுலே முதல்வனை அறியமாட்டா; அவை காந்தம் கண்ட பசாசத்து – உயிரின்முன் கண் முதலிய கருவிகளும், முதல்வன் திருவருளின் முன் உயிர் உணர்வும் தொழிற்படுவது காந்தத்தின் முன் இரும்புத் தூள் போலவாம்.

விளக்கம்: முற் சூத்திரங்களில் உயிரானது உடம்புக்கும் கருவிகட்கும் வேருய் உள்ளது என்றும், அது மலமறைப்பால் சிற்றறிவுடையதாயிற்று என்றும் கூறினர். இங்கு அது முதல்வனுல் அறிகிறது என்று கூறுகிருர்.

மூன்று நான்காவது சூத்திரங்களில் கூறப்பட்ட உயிரைப் பற்றியே இங்கும் கூறுகிறார். அதனால் 'விளம்பிய உள்ளத்து' என்று சொல்லுகிறார். உள்ளம் என்பது உயிரை.

'ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின்'

என்று திருவள்ளுவ நாயனாரும்,

'ஈசனை என்னெஞ்சில் கண்டதுஎன் உள்ளமே'

என்று திருநாவுக்கரசு நாயனாரும் கூறுவதனால் உள்ளம் என்பது உயிர் என்று அறியப்படும். முற் சூத்திரங்களில் ஆன்மா எனப்பட்ட உயிர் தத்துவங்களுக்கு உள்ளே இருப்பது என்பதை உணர்த்துவதற்கு 'உள்ளம்' என்றார் எனினும் அமையும். உயிரால், உலகப் பொருள்களை மெய் வாய் கண் மூக்குச் செவியாகிய கருவிகள் அறிகின்றன. மேலும் அவை அறியும் போதும் தத்தம் அளவுக்குட்பட்டே அறியும். கண் நீண்ட தொலைவில் உள்ள பொருளைக் காணாது. அவ்வாறே ஏனைய கருவிகளும் ஆம். இனி, இவை ஓர் அளவுக்குட்பட்டே பொருள்களை அறியுமே தவிர, தம்மை இயக்குகின்ற உயிரினை அறியா. ஆதலின், 'மெய் வாய் கண் மூக்கு அளந்தறிந்து அறியா' என்று கூறுகிறார்.

'பொறிபுலன் கரண மெல்லாம் புருடனால்
அறிந்து ஆன்மாவை
அறிதரா'

என்ற சிவஞான சித்தியார் வாக்கையும் காண்க.

'தாம்' என்பதும், 'தம்' என்பதும் உயிரினைக் குறிக்கும். உயிர் பலவாதலின் பன்மையில் கூறுகின்றார். முதல்வன் உயிர்க்குயிராக இருந்து இயக்கு

கிருன். ஆதலால் அவனது திருவருளை, 'தம் தமி அருள்' என்று கூறுகிருர். 'தமி' என்றது, தம்மை யெல்லாம் உடைய முதல்வனைக் குறிக்கும் ஓர் அருமை யான சொல். இவ்வழக்கு ஏனைய நூல்களில் காண் பது அரிது. முதல்வனது அருளால் உயிர்களானவை உலகப் பொருள்களை அறிந்தும் முதல்வனை அறியா; இனி, உலகப் பொருள்களை அறிவதும் அளவுக்குட் பட்டே அறியும். ஆதலின், 'தாம் உணர்வின் அளந்து அறியா' என்று கூறுகின்ருர். 'அளந்தறிந்தறியா' என்ற உவமைக்குரிய வினையை உவமேயத்துக்கும் ஏற்றிப் பொருள்கொள்ளப்பட்டது.

இனி, தம்மை இயக்கும் உயிரைக் காணுத கண் முதலிய கருவிகள் எவ்வாறு தொழிற்படுகின்றன? அருளை அறியாத உயிரும் எவ்வாறு தொழிற்படு கின்றது? இரும்புத்தூள் காந்தக் கல்லின் முன் எவ்வாறு செயற்படுகிறதோ, அது போன்று, உயிரின் முன் கண் முதலிய கருவிகளும், அருளின் முன் உயி ரும் செயற்படுகின்றன என்பதாம். ஆதலின், 'காந்தம் கண்ட பசாசத்தவையே' என்று கூறுகிருர். காந்தம் என்பது ஒருவகை ஈர்க்கும் சக்தியுடைய கல். பசாசம் என்பது இரும்புத்தூள். இனி, இரும்பு அசைந்து தொழிற்படினும், காந்தத்துக்கு அசைவு இல்லை; அது போன்று உயிர் இயங்கினும், முதல்வனுக்கு அசைவு இல்லை என்பது உவமையால் விளங்கு கிறது.

கருத்து: ஆன்மா திருவருள் இயக்க இயங்கும் என்பது கூறப்பட்டது.

ஆறாவது சூத்திரம்

உணர்உரு அசத்துஎனின் உணராது இன்மையின்
இருதிற னல்லது சிவசத் தாம்என
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே.

முடிபு: தமியாகிய பரம்பொருள் உணர் உருவோ எனின் அசத்து; உணராததோ எனின் இன்மை: இருதிறன் அல்லது சிவசத்தாம் என இரண்டு வகையில் மன்னுலகு இசைக்கும்.

பதப்பொருள் : உணர் உரு எனின் - முற்சூத்திரத்தில் கூறப்பட்ட முதல்வன் மெய் வாய் கண் மூக்குச் செவியாகிய கருவிகளால் அறியப்படும் பொருள் என்றால்; அசத்து - அழியக்கூடிய பொருளாம்; உணராது எனின் இன்மை - எவ்வகையாலும் அறியப் படாத பொருள் என்றால் இல்பொருளாம்; இருதிறன் அல்லது - மேற்குறித்த இவ்விருவகையும் ஆகாமல்; சிவசத்தாம் என - சிவசத்து என்று; இரண்டு வகையில் - ஒரு வகையால் அறியப்படாததும், ஒரு வகையால் அறியப்படுவதும் ஆகிய பொருள் என்று இருவகையாக; மன் உலகு இசைக்கும் - பெரு மக்கள் கூறுவர்.

விளக்கம் : முற் சூத்திரத்தில் ஆன்மாவினது இயல்பைக் கூறி இங்கு முதல்வனது இயல்பு கூறுகிறார். தமியாகிய முதல்வன் உலகப் பொருள்களைப் போலக் கருவிகரணங்களால் உணரப்படும் பொருளா அல்லது உணரப்படாதவனு என்பது கேள்வி.

அதற்கு விடை : கண்ணால் உலகப் பொருளைப் பார்க்கிறோம். அவை ஒரு காலத்தில் தோன்றி ஒரு காலத்தில் மறைவதையும் காண்கிறோம். 'கண்டன

மறையும்' என்கிறார் பட்டினத்தார். ஆகவே, கருவி கரணங்களால் அறியப்படும் பொருள் அழியும் என்பது தெரிகிறது. இனி காதினால் இசையைக் கேட்கிறோம்; நாவினால் சுவையை உணர்கிறோம்; மூக்கினால் மணத்தை நுகர்கிறோம்; பரிசத்தினால் ஊற்றினை உணர்கிறோம். இவை எல்லாம் நுண்பொருளாயினும் அவையும் அழியக்கூடியனவேயாம். மனத்தினால் உணர்கிறதும்கூட அவ்வாறேயாம். ஆகவே, கருவிகளால் பற்றி உணரப்பட்ட பருப்பொருளும் நுண்பொருளும் அழியக்கூடியனவேயாம். அதுபோல முதல்வன் பருப்பொருளாகவோ நுண்பொருளாகவோ அறியப்படும் பொருளானால் அவனும் அழியக்கூடிய அசத்தாம். ஆதலால், 'உணர் உரு எனின் அசத்து' என்கிறார்.

'அறிபொருள் அசித்து அசத்தாம்'

என்று அறியப்படும் பொருள் எல்லாம் அறிவற்றதும் அழியக் கூடியதும் ஆம் என்று சொல்லுகிறார் வழிநூலாசிரியரான அருள்நந்திசிவம். முதல்வன் அழிவில்லாதவனாதலின், மனம் முதலிய கருவிகளால் அறியப்படாதவன் என்பதாயிற்று.

இனி, ஒரு பொருளைக் கண்ணாலும் காண முடியாது; கருத்தாலும் நினைக்க முடியாது. இவ்வாறு எவ்வகையாலும் அறியப்படாத ஆகாயத் தாமரை போன்ற பொருள் என்றால், அஃது இல்லாத பொருளாகும். அதுபோல, முதல்வன் எவ்வகையாலும் உணரப்படாதவன் என்றால், அவன் எவ்விடத்தும் எப்பொழுதும் அறியப்படாத பொய்ப் பொருள் என்றாகிவிடும். ஆதலால்,

'உணராது (எனின்) இன்மை'

என்கிறார்.

'அறியாதது இன்றும்'

என்கிருர் சித்தியாரில். 'எனின்' என்பதை, 'உணருரு எனின்', 'உணராது எனின்' என முன்னும் பின்னும் கூட்டிப் பொருள் உரைக்கப் பட்டது.

ஆனல், முதல்வன் உணரப்பட்ட உலகப்பொருள் போன்று அசத்தும் அல்ல; உணரப்படாத ஆகாயத் தாமரை போன்று இல்பொருளும் அல்ல. அவன் இவ்விரு திறனும் அல்லாத, 'சிவசத்து' என்று கூறுகிருர் ஆசிரியர். மனம் முதலிய கருவிகளினுல் அறியப்படாமையால் 'சிவம்' என்றும், உண்மை ஞானிகளால் உணரப்படுதலால் 'சத்து' என்றும் கூறப்பட்டது.

மக்கள் அறிவு, நூல் அறிவு இயற்கை அறிவு என இருவகைப்படும். நூலைக் கற்பதனுல் பெறும் அறிவு நூலறிவு எனப்படும். நூலறிவு இல்லாதவர் சிறந்த திறமையுடையவராகத் திகழ்வதைக் காண்கிறேம். இவ்வறிவு அனுபவ வாயிலாகப் பெற்ற அறிவாம். இது இயற்கை அறிவு எனப்படும்.

'மதிநுட்பம் நூலோடுடையார்க்கு' என்று இவ் விருவகை அறிவையும் குறிப்பிடுகிருர் திருவள்ளுவ நாயனுர். இவற்றை முறையே பசுஞானம் என்றும், பாசஞானம் என்றும் கூறுவர். இவ்விருவகை அறிவினுலும் முதல்வனை அறியமுடியாது. இவை மனம் பொறி முதலியவைகளால் பெறுகின்ற அறிவு ஆதலின் அழியுந் தன்மையன ; அளவு பட்டன. மனத்துக்கும் பொறிகளுக்கும் அப்பாற்பட்ட பொருளை மனத்தாலும் பொறிகளாலும் அறியமுடியாது. ஆதலின் வழிநூலாசிரியரும்,

'பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரன்'

என்று கூறுகிறர். ஆனல் அறிவினல் ஒரு நெறிய சித்தத்தோடு சிந்திக்கச் சிந்திக்க முதல்வனது திருவருளால் ஓர் அறிவு தோன்றும். அவ்வறிவின் துணைகொண்டு அறியவேண்டும். இவ்வறிவைப் பதி ஞானம் என்பர்.

'அவனருளே கண்ணுகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன்
என்றெழுதிக் காட்டொ ணுதே'

என்ற சமய மரவராகிய திருநாவுக்கரசர் தேவாரத்தால் அறியலாம். இனி, பாச ஞானமும் பசு ஞானமும் அழியக் கூடியவையாதலின் அவை அபர ஞானம் என்றும், பதி ஞானம் அழியாதது ஆதலின் அது பர ஞானம் என்றும் கூறப்படும். முதல்வன் அபர ஞானத்திலே அறியப்படாதவன் என்றும், பர ஞானத்திலே அறியப்படுபவன் என்றும் இரண்டு வகையினல் ஞானிகள் கூறுகின்றனர். ஆதலால், 'இரண்டு வகையில் இசைக்கும் மன்னுலகே' என்கிறர் ஆசிரியர்.

கருத்து : முதல்வனது அருள் ஞானம் துணையாக அவனை அறியலாம் என்பது கூறப்பட்டது.

ஏழாவது சூத்திரம்

யாவையும் சூனியம் சத்தெதுர் இது அகலின்
சத்தே அறியாது அசதது இல துஅறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா.

முடிபு: சத்தெதிர் யாவையும் சூனியம் ஆகலின் சத்து அறியாது; அசத்து இலது ஆகலின் அறியாது; இரண்டலா ஆன்மா இருதிறன் அறிவுளது.

பதப்பொருள்: சத்து எதிர் யாவையும் சூனியம் — சிவமாகிய சத்தின் முன்னர் உலகப் பொருள் யாவையும் தனித்துத் தோன்ரு; ஆகலின் சத்து அறியாது — ஆதலால் சிவமாகிய சத்து அவற்றைப் பிரித்து அறியாது; அசத்து இலது (ஆகலின்) அறியாது — உலகப் பொருளாகிய அசத்து அறிவில்லாதாகையால் சிவமாகிய சத்தினை அறியமாட்டாது; இரண்டு அலா ஆன்மா — மேற்கூறிய சத்தும் அசத்தும் அல்லாத உயிரே; இருதிறன் அறிவுளது — சிவமாகிய சத்தினை யும் உலகப்பொருளாகிய அசத்தினையும் அதுஅது வாய்க் கலந்து அறியவல்லதாம்.

விளக்கம்: முற்சூத்திரத்தில் கூறப்பட்ட சிவ சத்து, வாக்கு மனத்தினலே அறியப்படும் அழிபொரு ளும் அல்ல; அறியப்படாத இன்மைப் பொருளும் அல்ல; ஆனல் பரஞானத்தால் அறியப்படும் பொருளாகும் என்று அதன் உண்மை கூறினர். இங்கு அச்சிவத்தை அறியக்கூடிய தகுதி உயிருக்கே உண்டு என்று கூறுகிருர்.

சிவமாகிய சத்து எல்லாப் பொருளிலும் உள்ளும் புறம்பும் நீக்கமற நிறைந்து விளங்கும் ஞான ஒளி யாகும். அதன்கண் அகப்படாத பொருள் ஒன்றும்

இல்லை. அதனால் 'சத்தெதிர் யாவையும் சூனியம்' என்கிறார் ஆசிரியர். இவ்வாறெல்லாம் ஒருங்கே சிவ ஒளிப் பரப்பினுள் அகப்படுதலின், அதனின் வேறாய் நின்று அறிதலாகிய செயல் நிகழ்தற்கு வாய்ப்பு இல்லை. அதனால், 'சத்து அறியாது' என்கிறார். அறிவானும் அறியப்படும் பொருளும் எனப் பிரிந்து நின்றாலன்றி அறிதலாகிய செயல் இல்லை. 'அறியாது' என்பதற்கு அறிதல் என்ற செயலைத் செய்யாது என்பது பொருள்; ஏரின் உழாஅர்' என்ற திருக்குறளில் உழாஅர் என்ற சொல்லுக்கு 'உழுதலைச் செய்யார் என்று பரிமேலழகர் பொருள் கூறுவது இங்கு நினைவு கூரத் தக்கது. அருள்நந்திசிவனார், இரவின்முன் இருள் போல, சத்தாகிய சிவத்தின் முன் அசத்து நில்லாது, ஆகையால் சத்தாகிய சிவம் அசத்தை அறியாது என்கிறார். இனி, 'யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின் சத்தே அறியாது' என்பதற்கு உமாபதி சிவாசாரியார்,

'அசத்தைச் சத்து அறிந்து அகலவேண்டா' என்று கருத்துரைக்கின்றார்.

எனவே, அறிவதாகிய தொழிலின் நிகழ்ச்சி ஒன்றை அறிந்து, கொள்ளுதற்கோ தள்ளுதற்கோ நிகழ்வது, சத்தாகிய சிவத்துக்கு அசத்தை அறிந்து தள்ள வேண்டிய நிலைமை இல்லை. ஏன்எனில், அசத்தோடு அதற்குத் தொடர்பு இல்லாமையே காரணமாம். இதனை விளக்க வந்த மதுரைச் சிவப்பிரகாசர், 'அசத்தாகிய பாசத்தைச் சத்தாகிய சிவன் அறிந்து அகலவேண்டா என்றது இந்திர ஜாலம் காட்டுமவனை அது பிரமிப்பிக்க மாட்டாதாற் போலப் பாசங்கள் ஜடமானபடியாலே சிவனை மறைக்கமாட்டாது. ஆகையால் அவனுக்கு

இதை அறிந்து அகல வேண்டா என்றது என அறிக' என்று உரைக்கின்றார். இவர் கருத்துப்படி இந்திர ஜாலம் அசத்தாகவும் அதனை காட்டுபவன் சத்தாகவும் நிற்பது காணலாம். இந்திர ஜாலம் காட்டுபவனும் இந்திர ஜாலம் ஆகிய இரண்டும் முறையே படைப்போனும் படைக்கப்படும் பொருளும் ஆகிய தொடர்பை உடையன. படைக்கப்படும் பொருளில் ஒவ்வொரு கூறும் படைப்பவன் அறிந்தது ஆகையால் அப்பொருளின்கண் அறியாமை மயக்கம் தோன்றிப் படைத்த பொருளை ஒவ்வொன்றாக அறிய வேண்டிய அவசியம் இல்லை. அதுபோல அசத்துப் பொருள் சத்தாகிய சிவத்தால் படைக்கப்படுவதால் அவ்வசத்தை அறிய வேண்டிய இன்றியமையாமை சிவத்துக்கு இல்லை என்பதாம்.

உலகப் பொருளாகிய அசத்து அறிவில்லாதது. அதனைச் சடம் என்பர். அவை அறிவில்லாதவை ஆதலால் அவற்றுக்கு அறிதல் என்ற தொழில் இல்லை. ஆதலின், 'அசத்து இலது (ஆகலின்) அறியாது' என்கிறார். உமாபதி சிவனாரும்,

'சத்து இது அசத்துத் தான் அறியாது' என்கிறார்.

இனி, சிவமாகிய சத்துப் பொருளும் உலகமாகிய அசத்துப் பொருளும் ஆகிய இரண்டினும் வேறுபட்டது உயிர். அதனை, 'இரண்டலா ஆன்மா' என்கிறார். இத்தொடர் 'இரண்டுமிலித் தனியனேற்கே' என்ற திருவாசகத் தொடரை அடியொற்றி அமைந்திருத்தல் அறியத் தக்கதாகும்.

அறிவுடையதாய்ச் சிவத்தோடு கலந்து சத்தையும் உலகப்பொருளோடு கலந்து அசத்தையும் அறியும்

தகுதி உயிருக்கு உண்டு. அது விளங்குவதற்காகவே, 'இருதிறன் அறிவுளது' என்கிருர். இவ்வாறு சத்தோடு கூடிச் சத்தையும், அசத்தோடு கூடி அசத்தையும் அதுவதுவாய்க் கலந்துநின்று அறிவதனல் உயிரை, 'சதசத்து' என்று பெரியோர் கூறுவர். இக்கருத்து இனிதே புலப்பட,

'சத்து அசத்து அறிவது ஆன்மா
தான்சத்தும் அசத்தும் அன்று
நித்தமாய்ச் சதசத்தாகி
நின்றிடும் இரண்டன்பாலும்'

என்கிருர் அருள்நந்திசிவனரும். எனவே உயிரால் அறியப்படுவன சத்தும் அசத்தும் என இரண்டும் ஆயின.

இனிச் சத்தையும் அசத்தையும் அறிவது உயிர் என்றபோது, அது எப்படி அறிகிறது? சத்தை அறிகிறபோது அவ்வறிவினல் சத்தின் இடமாக நின்று அதன் இயல்புகளை அறிகிறது. இவ்வாறே அசத்தை அறிகிறபோது அவ்வறிவினல் அசத்தின் இடமாக நின்று அதன் இயல்புகளை அறிகிறது.

இனிச் சிவமாகிய சத்துக்குப் பொருளாகாத உலகமாகிய அசத்து, சத்தாகிய உயிரின் முன்னர் எவ்வாறு அறியப்படும் பொருளாகிறது? சத்தும் சித்துமாகிய சிவமும் உயிரும் ஓரினமாயினும், சிவத்தை நோக்க உயிர் மலப்பிணிப்பால் அறியாமையும் குற்றங்கள் விரவும் தன்மையும் உடையது. ஆகையால் அறிவில்லாதாகிய அசத்தோடு கலந்து அறிகிற பொழுது அவ்வசத்து அதன்முன் அறியப்படும் பொருளாகிறது என அறிக. அசத்தாம் தன்மை உயிரினிடம் இருப்பதனலே,

'குற்றமெல்லாம் உற்றிடும் உயிரின் கண்ணே' என்று அருள்நந்திசிவஞர் கூறுகிருர்.

இறைவன் உயிர் தளை ஆகிய முப்பொருளில் ஏனைய இரண்டையும் அறியும் பொருள் உயிர் என்பதை அநுபூதிச் செல்வர் உமாபதிசிவஞர்

'சத்தசத்தைச் சாராது அசத் தறியாது அங்கண் இவை
உய்த்தல் சதசத்தாம் உயிர்'

என்று கூறுவதால் உணரலாம்.

கருத்து: சிவமாகிய சத்தை அறிந்து அனுபவித்தற்குரிய தகுதி உயிருக்கே உண்டு என்பது கூறப்பட்டது.

———

எட்டாவது சூத்திரம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

முடிபு: இரண்டலா ஆன்மாவாகிய உயிர் செய்யும் தவத்தால் தம் முதல் குருவுமாய் ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை என உணர்த்த, விட்டு அன்னியம் இன்மையின் அரன்கழல் செலும்.

பதப்பொருள்: தவத்தினில் – ஆன்மாக்கள் செய்யும் தவத்தால்; தம்முதல் - இறைவன்; குருவுமாய் – உள்ளுணர்வாய் உணர்த்துவதேயன்றிக் குருவாகவும் வந்து; ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை என– ஐம்புலன்களாகிய வேடர் கூட்டத்தில் வளர்ந்து உன் இயல்பினை மறந்தாய் என்று; உணர்த்த – அறிவுறுத்தவே, அவ்வறிவால்; விட்டு - ஐம்புலத் தொடர்பை விட்டு நீங்கி; அன்னியம் இன்மையின் – (அறிவுக்கறிவாய் இருக்கும் அரன்கழலன்றி) வேறு சார்பு இல்லாமையால்; அரன் கழல் செலும் – முதல்வனது திருவடியை அணையும்.

விளக்கம்: உயிர் அறிவுள்ள பொருளாதலின் சிவத்தை அறிவதற்குரிய தகுதி உண்டு என்று முற் சூத்திரத்தில் கூறினர். இங்கு அத்தகுதி பற்றி உயிருக்கு முதல்வனே குருவாக வந்து உணர்த்துவான் என்று கூறுகிறார்.

இறைவனை அறிவதற்கு, உயிருக்கு மெய்யுணர்வோடு தவமும் வேண்டும். தவம் என்பது, உயர்ந்த குறிக்கோளை அடைவதற்குச் செய்யும் முயற்சி. அவ்வகையில் இறைவன் அருளைப் பெறுதற்குச் செய்யும்

பெருமுயற்சியும் கூடத் தவமெனப்படும். தவம் மேற் கொள்வோன் தனக்குற்ற துன்பத்தைப் பொறுத் துக்கொண்டு பிறர்க்கும் துன்பம் செய்யாது வாழ் வான்.

'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்துக் குரு"

என்பது பொய்யாமொழி. சாதாரணமாக உலகிய லிலும் கூட ஓட்டப் பந்தயம் ஓடுபவர் இடையிலே முள் குத்துவது போன்ற சிறு துன்பங்கள் நேர்ந்தாலும் பொருட்படுத்துவது இல்லை. தன்னோடு ஓடுபவர் மேலே வந்து மோதினாலும் கவலைப்படுவது இல்லை. குறிக்கோளை அடையவே அவர் விரைவார்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்'

என்ற குமரகுருபர சுவாமிகள் திருவாக்கும் இத்தவத் தைக் குறித்ததேயாகும். இது தவத்தின் பொது இயல்பு. இனி, சரியை கிரியை யோகம் எனச் சாத் திரங்கள் ஓதும் செயல் முறைகளும் தவம் எனப்படும். சரியையாவது, நல்லொழுக்கம். கிரியையாவது, அறம் பிறழாத செய்கை. யோகமாவது, மனத்தின் திட்பம். சரியையால் மந்ததர சத்திநிபாதமும், கிரியையால் மந்த சத்திநிபாதமும், யோகத்தால் தீவிர சத்திநிபாத மும் உண்டாகும். சத்திநிபாதமாவது, நலந்தீங்கு கண்டு நலத்தினை அறிந்து உணர்தல். மந்ததர சத்திநிபாதமாவது, நல்லதன் நன்மையைத் தெரிந்து விரும்புதல். மந்தசத்திநிபாதமாவது, நன்மையின் பால் பற்று வைத்தல். தீவிர சத்திநிபாதமாவது, அது நல்கும் இன்பம் நுகர்ந்து அதனிடத்தே

உறைத்து நிற்றல். சத்திநிபாதம் என்ற தொடர் சத்தி + நிபாதம் எனப் பிரியும். சத்தியாவது, உண்மை உணர்வு. நிபாதமாவது, பதிதல். உண்மை உணர்வாகிய அருள் ஞானம் பரசிவத்திலிருந்து கீழுள்ள உயிரிடத்தே வந்து பதிதலால் அதைத் தோன்றுதல் என்று சொல்லாமல் நிபாதம் என்று சொல்லுகின்றனர்.

இனி, தவம் செய்யும் உயிர்கள் மூன்று வகையாக உணர்த்தப் பெறும். முதலாவதாக, இயற்கைக் காட்சியிலிருந்து உண்மை புலப்படுத்தப்படும். நீர், மலை உச்சியினின்றும் இழிந்து கால்வாய் வழியே தாழ்ந்து சென்று ஆங்காங்குப் பயன்படுகிறது. நீர், உயர்ச்சியை விரும்பவில்லை; தாழ்ச்சியை விரும்புகிறது. சென்றவிடமெல்லாம் அது நன்மையைப் பெறுவதில்லை; பிறர்க்குப் பயன்படுகிறது. அதுபோன்று உயிரானது உயர்ந்த இடத்தை விரும்பாது தாழ்ந்த இடத்திலே நின்று, தான் நலம் பெற விரும்பாது பிறர்க்குப் பயன்பட வேண்டும் என்ற உண்மை இயற்கைக் காட்சியினுல் புலனுகிறது. இஃது இயற்கை வாயிலாக இறைவன் காட்டுகிற அருள். அடுத்து மக்கள் வடிவிலே வந்து உண்மைப் பொருளை விளக்கம் செய்வது. பெற்றோர் வாயிலாகவும், நண்பர்கள் வாயிலாகவும், ஆசிரியர் வாயிலாகவும் முதல்வன் உணர்த்துகிருன். மூன்ருவதாக உள்ளத்திலே உயிருக்குயிராக இருந்து 'காட்டாதன எல்லாம் காட்டி' உண்மையை விளங்க வைப்பது. இது திருவருள். இவ்வாறு நன்முயற்சியால் பக்குவப்பட்ட உயிரின் தகுதிக்கேற்ப உணர்த்துகிருன், ஆதலால் 'தவத்தினில் உணர்த்த' என்கிருர். அண்மையில் இருந்து மறைந்த ஆங்கில நாட்டு அறிஞர் கருத்தும்இதனேடு ஓரளவு ஒத்து உள்ளது என்பதைக் கண்டு மகிழ்க.

'We have experience of three kinds of helps-animal (Instinctive) Grace, human Grace and spiritual Grace.'
(Aldous Huxley)

இவ்வாறு பக்குவப்பட்ட உயிருக்கு அருள்புரிந்து உணர்த்துபவன் கருணையே வடிவாகவுள்ள முதல்வனுகிய சிவமேயாம். அவன் இயற்கைப் பொருள்களினின்றும், உள்நின்றும் உணர்த்துவதோடு குருவாகவும் புறத்தே வந்து அருள்புரிவான் என்பதாம். மானுட வடிவிலே தோன்றி அருளுவது சிவத்தினது எளிமைப் பண்பாகும். அறிவு வடிவாகிய உயிர்க்கு அறியவேண்டுவனவற்றை அறியும் தகுதி இருந்தும் முதல்வன் உணர்த்த வேண்டிய இன்றியமையாமை ஏன்? அறிவே வடிவாகிய உயிர் மலமறைப்பால் அறியாமையுறுகிறது. அறிவும் அறியாமையும் உள்ளமையால் பிறரால் உணர்த்தப்பெற வேண்டிய அவசியம் உண்டாகிறது. முதல்வனுகிய சிவமே தன்னை அடையும் நெறியையும், தன்னை அறியும் அறிவையும், தன்னையும் காட்டி அருள்புரிவான் என்ற உண்மையை,

'நெறிநீர்மையர் நீள்வானவர் நினையும் நினைவாகி
அறிநீர்மையில் எய்தும்அவர்க் கறியும் அறிவருளிக்
குறிநீர்மையர் '

என்ற திருஞானசம்பந்தர் திருவாக்கால் அறியலாம். இனி, திருஎறும்பியூர்த் திருத்தாண்டகத்தில் திருநாவுக்கரசர்,

'தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியுங் காட்டி '

என்பதனுல், சிவமே நெறியையும் திறத்தையும் காட்டும் என்றி கூறி விளக்குகிறுர்.

'அறிவி லாத எனைப்புகுந் தாண்டுகொண்
டறிவதை அருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய எந்தையை'

என்று மாணிக்கவாசக அடிகள் இக்கருத்தையே வலியுறுத்துகின்றார். இத்தகைய சமய நுட்பங்களை ஆங்காங்கு வெளிப்படையாகவும் குறிப்பாகவும் அறிவுறுத்தருளிய மாண்பினால் திருஞானசம்பந்தர் முதலிய நால்வர் பெருமக்களையும் சமயகுரவர் எனச் சான்றோர் வழங்குவர் என்பது அறிக. இவ்வாறு தவத்தின் வாயிலாக மூவகை நிலையிலும் உணர்த்துபவன் முதல்வனாகிய சிவனே என்பது விளங்க, 'தம்முதல் குருவுமாய்' என்று கூறுகிறார். இவ்வாறு ஞானமும், ஞான நெறியும் அருளி ஆன்மாவைத் தாங்குதல் முதல்வனுக்குக் கடன் என்று உணருமாறு, 'தன்கடன் அடியேனையும் தாங்குதல்' என்று திருநாவுக்கரசர் கூறுகிறார்.

' அருவாகி நின்றானை யாரறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று'

என்று சிவஞானபோத வெண்பாவும் கூறுகிறது. பக்குவப்பட்ட உயிர்க்கு முதல்வன் கட்டாயம் அருள்வான் என்று பின் வந்த ஜெர்மனி நாட்டு அருளாசிரியரான ஏக்கார்ட்டு என்பவர் கூறுகிறார்.

'God is bound to act, to pour Himself into thee as soon as He shall find thee ready' (Eckhart)

இனி முதல்வன் என்ன உணர்த்துவான்? சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐம்புலன்களாகிய வேடர்களிடையே அரசகுமாரனாகிய நீ அகப்பட்டுக் கொண்டு உன்னை மறந்து அவர்கள் செலுத்துகிறபடி நடந்து கொண்டிருக்கிறாய். அந்நிலைமாறி உன்

னுடைய இயல்பான இடமாகிய அரசகத்துக்குச் சென்று இன்புறுவாயாக' என்று உணர்த்துவான். இதனை, 'ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனை உணர்த்த' என்று கூறுகிறார். எறும்புக் கூட்டத்திடையே அகப்பட்ட நாங்கூழ்ப் பூச்சி எவ்வாறு அரித்துத் தின்னப்பட்டு அவதியுறுமோ அவ்வாறு ஐம்புலனால் அரிப்புண்டு அவதியுறுகிறேன் என்று ஐம்புலனால் உண்டாகும் அயர்வினை உவமையால் விளக்குகிறார் மாணிக்கவாசக அடிகள்.

'எறும்பிடை நாங்கூ ழெனப்புல
னலரிப் புண்டலந்த
வெறுந்தமியேனை விடுதி கண்டாய்'

என்பது திருவாசகம். அயர்ந்தனை வளர்ந்தெனை' என்றது 'வளர்ந்து அயர்ந்தனை' என்று மாற்றிப் பொருள் கொள்ளப்பட்டது. வேடர்களிடையே வளர்ந்தமையால் அயர்வு உண்டாயிற்று என்பதாம். ஆகவே வேட்டுவர் வழிநின்ற அரசகுமரன் அரசகம் அடைந்தவழி அவ்வேடர் கூட்டம் அவன்வழி நிற்பது போல, ஐம்புலன்களின் வழிநின்ற உயிர் உண்மை உணர்ந்தவிடத்து அப்புலன்கள் உயிரின் வழி அடங்கி நிற்கும் என்பது உணர்தற்பாலது.

உயிர் இருள் நீங்கி இன்ப விளக்கம் பெறும் பொருட்டு உடல் கருவி உலகுகளை முதல்வன் படைத்து அளித்துள்ளான்; அங்ஙனமிருக்க உயிர் வளர்ந்து அயர்ந்தது ஏன்? உயிருக்கு இன்பப் பேற்றிலேயே நோக்கம். அவ்வின்பம் தரும் பொருள்கள் யாவையாயினும் அவற்றோடு அதுவதுவாய்க் இயைந்து நுகர்வது உயிர்க்கு இயல்பு. மேலும் அது கருவிகளோடு கலந்து இயைந்தாலன்றி அறிவு விளக்கம் பெறமுடியாது. அதனால் கருவிகள் இன்ப

வடிவாய் உயிரைத் தம்வயம் ஈர்த்து அறிவு பெறுவிக்கின்றன. உயிர்கள் மலக் கலப்பினால், அவை வெறும் கருவிகளே தவிர முதல் அல்ல என்று பிரித்துணராது, அவற்றின் வழி நின்றுவிடுகின்றன. அதனால்தான் அவை ஐம்புலன்களால் வளர்ந்தும் அயர்ந்து விடுகின்றன. கருவிகளே மயக்குகின்றன என்று பெரியோர்கள் கூறுவதன் கருத்து என்ன? கருவிகள் உயிரைத் தம் வயப்படுத்தும் பொருட்டு இன்பம் நல்குகின்றன. அவ்வின்பம், இன்ப நாட்டமுடைய உயிரை மயக்கி விடுவதால், கருவிகள் மயக்குவனவாகப் பெரியோர் கூறுவது உபசாரம்.

இங்ஙனம் உணர்த்த உணர்ந்த அரச குமரன் வேடர் சூழலைவிட்டு நீங்கி அரசியல் சூழலை அடைந்து இன்புறுவது போல, உயிர் ஐம்புலச் சூழலை விட்டு நீங்கி முதல்வனது திருவருட் சூழலை அடைகின்றது என்பது விளங்க, 'விட்டு அரன்கழல் செலுமே' என்று சொல்லுகிறார். கழல் அல்லது திருவடி என்பது திருவருள்.

ஆன்மாவுக்கும் அரன்கழலுக்கும் உள்ள தொடர்பு யாது? ஆன்மாக்களுக்கெனத் தனி நிலை கிடையாது. ஒன்று உலகம், மற்றொன்று அருள். ஐம்புலன்களோடு கூடிவாழும் உலகத் தொடர்பை விட்ட இடத்து அதற்குச் சார்பாவது திருவருளே. ஆதலால்

அன்னியம் இன்மையின் அரன்கழல்
செலுமே'

என்று கூறுகிறார். 'அன்னியம் இன்மையின்' என்றது, அருளின் வேறாகப் பிறிதொரு சார்பே இல்லை என்பதைக் காட்டுதற்காம். 'சார்புணர்ந்து சார்பு

கெட ஒழுகின்' என்பதும் இக்கருத்தை விளக்குவதேயாம். 'சார்புணர்ந்து' என்பதற்குச் சார்பு உணர்த்த உணர்ந்து எனப் பொருள் கொள்ளுதல் வேண்டும். சார்புகெட ஒழுகுவதாவது, ஐம்புலச் சார்பை விட்டு அருட்சார்பு நன்கு எய்த ஒழுகுவதாம்.

கருத்து: முதல்வனே குருவாக எழுந்தருளி வந்து உண்மை உணர்த்துவான் என்பது கூறப்பட்டது.

ஒன்பதாவது சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே.

முடிபு : குரு உபதேசமான பின் ஊனக் கண் பாசம் உணராப் பதியை ஞானக் கண்ணினில் சிந்தை நாடுக ; பாசம் உராத்துணைத் தேர்த்தென ஒருவ பதி தண் நிழலாம் ; அஞ்செழுத்து விதி எண்ணுக.

பதப்பொருள் : ஊனக்கண் — குறைவு பட்ட இயற்கை அறிவினுலும்; பாசம் — செயற்கை அறிவினுலும்; உணராப் பதியை — அறிய முடியாத முதல்வனை; ஞானக் கண்ணினில் — ஞானகுரு உபதேசித்த நெறியினுல்; சிந்தை நாடி — அறிவினில் நாடுவாயாக, நாடுங்கால்; பாசம் — உலகம் உடல் கருவியாவும்; உராத்துணைத் தேர்த்தென — பேய்த்தேர் போன்று; ஒருவ — நீங்கவே ; பதி தண்நிழலாம் — பதியினுடைய தண்ணிய திருவடிக்காட்சி பெறப்படும்; அஞ்செழுத்தை — திருவைந்தெழுத்தை; விதி எண்ணும் — (காட்சி பெறுதற் பொருட்டும், பெற்ற காட்சி மறவாமைப் பொருட்டும்) முறைப்படி எண்ணுவாயாக.

விளக்கம் : முற் சூத்திரத்தில் முதல்வன் குருவாக எழுந்தருளி உபதேசம் செய்வான் என்றார். இங்கு அவ்வுபதேசப் பொருள், கை வருதற்கு உரிய நெறிமுறையைக் கூறுகிறார்.

அறிவு, இயற்கை அறிவு செயற்கை அறிவு என இருவகைப்படும். இயல்பாகவே உயிருக்குள்ள அறிவு இயற்கை அறிவாகும். இது குறைவுடையது.

ஆதலின் 'ஊனக் கண்' என்கிறூர். நூல் வாயிலாகப் பெறுகின்ற அறிவு செயற்கை அறிவு எனப்படும். அவ்வறிவும் பிற உயிர்களின் இயற்கை அனுபவத்தை எடுத்துக் கூறுபவையாதலின் அதுவும் குறைவுடைய தாம். அதனை 'பாசம்' என்கிறூர். இவ்வறிவு பேரறிவுடைய பரம் பொருளைக் காண்பதற்குக் கடைபோகத் துணை செய்யாது. உயிர், அறிவும் அறியாமையும் உடையது ஆதலின் அறிவே மயமான முதல்வனைக் காண முடியாது. ஆனல் குறைப்பாட்டினை உணர்ந்து குருவினது உபதேசப்படி அறிவினிலே சிந்திக்க வேண்டும். ஆகவே, 'ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக் கண்ணினில் சிந்தைநாடி' என்கிறூர். 'நாடி' என்பதற்கு நாடுக என்று பொருள் கூறுவர் சிவஞான முனிவர்.

அவ்வாறு சிந்திக்கச் சிந்திக்க உலகம் உடல் கருவி முதலியவை உறுதிப் பொருள் அல்ல என்று தோன்றும். ஆதலின், 'உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவ' என்று கூறுகிறூர். 'உராத்துனைத் தேர்' என்றது கானலாகிய பேய்த் தேரினை. தேர் என்பது நான்கு சக்கர வண்டி. வெயில் காலத்தில் வெட்டவெளியில் தோன்றி ஓடும் கானல், தேர்போலத் தோன்றுவதால், அது தேர் எனப்படுகிறது. தேர்களில் மக்கள் ஊர்ந்து செல்வர். ஆனல் இந்தத் தேரில் யாரும் ஊர்ந்து செல்ல முடியாது. ஆதலினுல் 'உராத்துனைத் தேர்' என்கிறூர். ஊரா என்பது உரா என வந்தது. துனை என்பது வேகம். ஆகவே ஊரப்படாத விரைந்து செல்லக் கூடிய தேர் என்பதாயிற்று. இது கானலை விளக்க வந்தது. பாசமானது பேய்த் தேரின் இயல்புடையது என்று காட்டுவதற்கு, 'தேர்த்தெனப் பாசம்' என்கிறூர். கண்ணுக்குத் தூரத்தில் நீர் நிலையாய் உள்ளது

போலத் தோன்றி நெருங்கியதும் இல்லாது ஒழிவது பேய்த்தேரின் இயல்பு. அதுபோல, வாழ்வார்க்கு உறுதிப் பொருள்போலத் தோன்றிப் பயன் நோக்கு மிடத்து உயிர்வாழ்க்கைக்குக் கருவியும் இடமுமாய்க் கழிந்துபோவதால், உலகு உடல் ஆகிய பாசம் பேய்த் தேர்த்தென எண்ணி ஒருவுக என்கிறார்.

அங்ஙனம் பாசக் கூட்டங்களை உறுதி அல்ல என்று கழிக்கவே, இவற்றுக்கு வேறாக அருட்காட்சி புலப்படும். அஃதாவது அருள் ஞானம் உண்டாகும். அஃது உலக வாழ்வில் உழன்று வெம்பி வெதும்பும் உயிர்க்குக் குளிர்ச்சியாய் இன்பம் செய்வது பற்றி, 'தண் நிழலாம் பதி' என்கிறார். பதி என்றது பதி ஞானத்தினை.

அவ்வின்பப் பயனைப் பெறுவதற்குரிய வழியே அஞ்செழுத்தாகும். அஞ்செழுத்தாவது, சி வ ய ந ம என்பது. அஞ்செழுத்துக்களும் தனித்தனிப் பொருளை உணர்த்துதலால் ஐந்து பதமெனவும் கூறப்படும்.

'அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி'

என்கிறார் சுந்தரரும். இவ் வைந்தெழுத்தும் முதல்வனது திருப்பெயராகத் தியானிக்கப்பெறும். அம்முறையில் முதல்வனது திருநாமம் நமசிவாய என்பது.

'நந்தி நாமம் நமச்சிவாயவே'

என்பது திருஞானசம்பந்தர் வாக்கு. சிவாயநம என்பது முதல்வன் திருப்பெயர் அல்ல; அஃது அவனது திருநாமத்து எழுத்து ஐந்து என்று திருநாவுக்கரசர்,

'படைக்கல மாகவுன் நாமத் தெழுத்தைந்தும்
என்நாவில் கொண்டேன்'

என்று விளங்க உரைக்கின்றார். சி என்பது சிவம். அது சத்து சித்து ஆனந்தமாய் உள்ளது. அஃது

என்றும் உள்ளதும், முற்றறிவுடையதும் பேரின்ப முடையதும் ஆதலின், உயிர்கட்கு நிலைபேறும் நிறை அறிவும் பேரின்பமும் நல்கவல்லது. வ என்பது அருள். அஃது உயிர்கட்கு உலகு உடல் மனம் முதலிய கருவிகளைப் படைத்து அளித்து இயக்குவது. உயிர் தானாகவே உடல் முதலியவற்றை எடுத்துக் கொள்ள முடியாது. அவ்வாறு எடுத்துக் கொள்வதாயின் எல்லா உயிர்களும் நல்ல அழகான உடல்களையன்றோ எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு உலகத்தில் காணப்படவில்லையே. ஆதலின் இவையெல்லாம் ஒரு திருவருள் சக்தியினால்தான் காரியப் படுகின்றன என்பது புலனாகிறது.

'The very hairs of your head are numbered'

என்ற மேலைநாட்டு வேதமொழியையும் ஒப்பிட்டு மகிழ்க. நூற்பு ஆலையும் அதனை இயக்கும் மின் சக்தியும் போல, உடம்பும் உலகமும் அருட் சக்தியும் உள்ளன என்று உணர்தல்வேண்டும். அச்சக்தி வித்யா தேகத்தைத் தூண்டி உயிரின் அறிவு இச்சை செயல்களாகிய ஆற்றலை எழுப்புவது; மானத தேகத்தை இயக்கி உயிரின் அறிவு இச்சை செயல்களுக்கு ஏற்ற எண்ணங்களை எழுப்புவது; அடுத்துத் தூல தேகத்தை இயக்கிச் சொல் செயல்களைச் செயற் படுத்துகிறது. ய என்பது உயிர். அஃது இருள் கலந்த ஒளிப்பொருள் போல அறியாமையாகிய மலம் கலந்திருப்பது. நெய் விளக்கில் இருள் கலந்திருப்பது போல, உயிரோடு அறியாமையும் உள்ளது. ஆனால் உடம்பாலும் உலகினாலும் அன்றி உயிர் அறிவு விளக்கம் பெற்று உய்தி பெற முடியாது. அது திருவருள் சக்தியால் ஒளி மிக்க மின் விளக்குப் போல மிளிர்தற்கு உரியது. ந என்பது மறைப்புச் சக்தி. அது நிகழ்ந்ததை மறைப்பித்து, நிகழ இருப்பதை

மறைத்து நேரில் நிகழ்வதை அதுவதுவாய் இயைந்து நுகரச் செய்வது. ம என்பது மலம், அல்லது அறியாமை. அறியாமை காரணமாக மாயை. மாயை என்பது உடல் முதலியவை. அதனை ஒட்டி வினை. வினை, நல்வினை தீவினை என்பன. ஆக, இவை மூன்றும் ஒன்றுக்கொன்று காரணமாக உள்ளன. மலம் என்ற அறியாமை உயிர் அறிவை இருள் செய்து நெறி மாற்றிக் குற்றத்துக்கு உள்ளாக்குவது. இங்ஙனம் இவ் வைந்தெழுத்தின் பொருளினை எண்ணி அறியாமை நீங்கித் திருவருள் துணை கொண்டு பேரின்பத்தினைப் பெற வேண்டும் என்பதற்காக 'விதி எண்ணும் அஞ்செழுத்தே' என்கிறார். யகரமாகிய உயிர் நமக்களை விட்டு நீங்கி வகரமாகிய திருவருள் துணை கொண்டு சிகரமாகிய சிவத்தினை அடைய வேண்டும் என்பதாம். மாணிக்கவாசக அடிகளும் உலகமாகிய கடலினைக் கடக்க அஞ்செழுத்தாகிய தெப்பத்தினைப் பற்றிக் கொண்டிருக்கிறேன் என்கிறார்.

' அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை ' என்பது அவர் மணி வாக்கு.

கருத்து: முதல்வனை எண்ணுவதற்குரிய வழி அஞ்செழுத்து என்பது கூறப்பட்டது.

———

பத்தாவது சூத்திரம்

அவனே தானே யாகிய அந்நெறி
ஏக ஞகி இறைபணி நிற்க
மலமாயை தன்ஞெடு வல்வினை இன்றே.

முடிபு: ஞானக்கண்ணுல் சிந்தையில் நாடப்பட்ட அவனே தானேயாகிய அந்நெறியை எண்ணி ஏகஞகி இறைபணி எனக் கருதி நிற்க மலம் மாயை தன்ஞெடு வல்வினை இன்றே.

பதப்பொருள்: அவனே தானேயாகிய - சிந்தையில் நாடப்பட்ட அம்முதல்வன் உயிரை முன்னிறுத்தித் தான் பின்னே நிற்பதாகிய, அந்நெறி - அம்முறையை மேற்கொண்டு; ஏகன் ஆகி - அவனை முன்னிருத்தித்தான் அவனுள் ஒடுங்கி; இறை பணி (என) நிற்க - நினைவு சொல் செயல் எல்லாம் முதல்வன் செயல் என்று எண்ணி அவ்வழி நிற்பாயாக, நின்ருல்; மலம் மாயை தன்ஞெடு - அறியாமையைச் செய்யும் மலமும் அதன் காரணமாக வரும் பிறவியும்; வல்வினை - வலிய வினையும்; இன்றே - இல்லையாய் ஒழியும்.

விளக்கம்: முற் சூத்திரத்தில் ஞானக் கண்ணினில் சிந்தை நாடி நிற்கும் முறையைக் கூறினர். இங்கு அங்ஙனம் நிற்பதனுல் உண்டாகும் பயன் கூறுகிருர்.

அங்ஙனம் ஞானக்கண் கொண்டு சிந்தையில் நாடும்பொழுது அவன் உடனய் நிற்கும் நிலை தோன்றும்.

'எங்கே போவேனுயிடினும்
அங்கே வந்தென் அகத்தீராய்'

என்றும்,

'எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கேயென் றருள்புரியும் எம்பெருமான்'

என்றும்,

'யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே'

என்றும் பெரியோர்கள் ஞானத்தால் கண்டு உரைப்பன காண்க.

'வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின் – வஞ்சிக்க
எங்கும்உளன் ஒருவன் இருக்கின்றான் என்றெண்ணி
அங்கம் குலைவது அறிவு.'

என்ற குமரகுருபர சுவாமிகள் வாக்கும் நினைவு கூறதக்கது. அவன் உடனாய் நிற்பதை உணர்ந்தவிடத்து அவன் முன்னே உள்ளானா பின்னே உள்ளானா பக்கத்தே உள்ளானா என்ற வினாவுக்கு விடை கூறுவது போல, பக்கத்திலோ முன்னோ இல்லாமல் உயிரை முன்னே நிறுத்தித் தான் அவ்வுயிரினுள்ளே அடங்கி நிற்கின்றான் என்பது விளங்க 'அவனே தானேயாகிய நெறி' என்று குறிப்பிடுகின்றார். இவ்வுண்மையைத் தான்,

'எங்கே போவே னாயிடினும்
அங்கே வந்தென் அகத்தீ ராய்'

என்றும்,

'எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கேயென் றருள் புரியும் எம்பெருமான்'

என்றும் வரும் அருளுரைகள் காட்டுகின்றன. உயிர்கள் மண்ணகத்தே தோன்றி வாழ்ந்தாலன்றி உய்தி இல்லை என்ற திருக்குறிப்பினால்தான், உயிர்களை முன்னிறுத்தி வாழச் செய்வது இன்றியமையாமை ஆயிற்று. கணக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் கணக்கைக் கொடுத்துப் போடச் செய்கிறபொழுதுதான் பின்னே

நின்று காட்டுவது உலகியலில் கண்டது. அதுபோல ஞானாசிரியனாகிய முதல்வனும் வாழ்க்கையில் உயிர்களுக்குப் பின்னே நின்று இயக்குகிறான் என்று உணர்தல் வேண்டும். இங்ஙனம் உயிரை முன் உய்த்துப் பின்னே இருக்கும் நெறியைத்தான் 'அந்நெறி' என்று ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

இனி, முன்னின்று தன்முனைப்போடு வாழும் உயிர் யான் எனது என்னும் பற்றுக்களுக்கு உள்ளாகிப் பல்வகைத் துன்பங்களை அடைகிறது. அவ்வப்போது முதல்வன் அறிவொளி நல்கியும் தன்முனைப்பால் அதனை உயிர் புறக்கணிக்கிறது. இவ்வாறு துன்பங்கள் அடுக்கி வந்து சுடுகிறபொழுது பின் நின்று செலுத்தும் முதல்வனை உணர்கிறது. அத்துன்பங்களினின்றும் நீங்குவதே அதற்கு நோக்கமாதலால், பின் நின்று உதவும் முதல்வனை முன்னே நிறுத்தி அவனது முதல்மையில் தான் ஒடுங்குவதே உண்மை நெறியாகும் என்று உணர்கிறது. அதுபற்றித்தான் அந்நெறி ஏகனாகுக என்று அறிவுறுத்துகின்றார்.

இங்ஙனம் ஏகனாதலே நெறி என்று கண்ட உயிர் அதனைச் செயற்படுத்துவது எங்ஙனம்? தன் முனைப்பற்றுத் தன்செயலற்றுத் தன்னுடைய நினைவு சொல் செயல் எல்லாம் நாதன் செயல் எனக் கையொழிதல் வேண்டும். அஃதாவது எழுகிற எண்ணங்கள் சொல்லுகின்ற சொற்கள் செய்கிற செயல்கள் யாவும் முதல்வன் செயல் என்று எண்ணி மொழிந்து ஒழுகுதல் வேண்டும்.

'கூறு நாவே முதலாகக்
கூறுங் கரண மெல்லாநீ
தேறும் வகைநீ திகைப்புநீ
தீமை நன்மை முழுதுநீ'

என்பது திருவாசகம். இங்ஙனம் சொல்லுவது எளிது, செயற்படுவதுதான் அரிது என்று எண்ணலாம். ஆனல் அதற்கு ஒரு வழி உண்டு. வாழ்க்கையிலே சிறிய இடையூறு சிறிய துன்பம் உண்டாகும் பொழுது, அவை முதல்வனது ஆணைப்படி உண்டாகின்றன என்று எண்ணிப் பழக வேண்டும். இது பற்றிப் பல அறிஞர்கள் சிந்தித்துள்ளனர்.

'Begin therefore in the smallest matters and most ordinary occasion and accustom your mind to the daily exercise of this pious temper in the lowest occurence of life' (William Law) என்பது மேலைநாட்டு அறிஞர் வாக்கு. இங்ஙனம் எண்ணிப் பழகிய பின்னர்ப் பெரிய இடையூறும் பெருந்துன்பமும் வந்தபோதும் அவற்றையும் முதல்வன் செயல் எனக் கருதும் மனப்பான்மை உண்டாகும். இதுவே இறைபணி என நிற்பதற்குரிய வழியாகும். சமணர்கள் செய்த கொடுமைகளை எல்லாம் திருநாவுக்கரசர், 'இவை ஈசன் எந்தை இணையடி நீழலே' என்று எண்ணியும் சொல்லியும் மகிழ்ந்தது உலகம் அறியும். எனவே, முதல்வனது செயல் என எண்ணி அமைவதையே, 'இறைபணி நிற்க' என்கிறார்.

இனி இவ்வாறு நிற்பதால் என்ன பயன்? நாடோறும் செய்கின்ற வினையினுல் வரும் துன்பங்கள் உண்டாகா. மேல் வினையும் ஏருது. அஃது எங்ஙனம் முடியும் என்று எண்ணலாம். உதாரணமாக ஒரு நீதிபதி கொலைஞன் ஒருவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிருர் என்று வைத்துக்கொள்வோம். நீதியின்படி அளித்த தீர்ப்பு ஆதலின் கொலைக்குற்றம் நீதிபதியைச் சாராது. அதைப் போல முதல்வன் ஆணைப்படி செய்யும் செயலால் வரும் பயனும்

உயிரைச் சாராது. எல்லாம் முதல்வனே ஏற்றுக் கொள்வான் என்பதாம்.

'நம்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேஎன் றுந்தீபற'

என்ற திருவுந்தியார் பாடல் வரி இக்கருத்தைத் தெளிவு செய்கிறது. ஆதலின் வினையின் தொடர்பு இல்லையாய் ஒழியும். வினை நீங்கவே அது காரணமாக வரும் மாயா காரியச் சார்பாகிய பிறப்பு நீங்கும். அதனுல்தான் 'மலம் மாயை தன்னெடு வல்வினை இன்றே' என்று சொல்லுகிருர்.

கருத்து - திருவருள் வழி நிற்ருல் வினையும் வினையால் வரும் துன்பமும் இல்லையாம் என்பது கூறப்பட்டது.

பதினோராவது சூத்திரம்

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

முடிபு: காணும் கண்ணுக்குக் காட்டும் உள்ளம் போல், உள்ளத்துக்குக் காண அரன் காட்டித் அவனும் உடன் காண்பதனுல் இறைபணி நிற்கும் உள்ளமாகிய ஆன்மா அரன் கழல் செலும்.

பதப்பொருள்: காணும் கண்ணுக்கு – காணும் தன்மையுடைய கண்ணுக்கு; காட்டும் உளம்போல் – காட்டிக் காண்கின்ற உயிரைப்போல; காண – உயிர் காணும் பொருட்டு; உள்ளத்தைக் காட்டிக் காண்டலின் – உயிருக்குப் பொருள்களைக் காட்டி முதல்வன் தானும் உடன்நின்று காண்கின்ருன் ஆதலின், அத் தன்மையினை நினைந்து; அயரா அன்பின் – அவ்வழித் தோன்றும் இடையருத அன்பினுல்; அரன்கழல் செலும் - அம்முதல்வன் திருவடியை உயிர் சென்று சேரும்.

விளக்கம்: முற்சூத்திரத்தில் உயிர் ஏகனுகி இறைபணி நிற்றலால், மலம் மாயை வினை நீங்கும் என்ருர். அவை நீங்கினவிடத்து உயிர் எய்தும் பேரின்பத்தினை இச்சூத்திரத்தில் கூறுகிருர்.

ஐம்பொறிகளிலும் கண்மிகச் சிறந்த கருவியாகும். அது எதிர்ப்படும் பொருள்களைக் காணவல்லது. அன்றியும் எதிர்ப்படும் பொருள் இருக்கும் தூரத் துக்கும் அதன் வடிவத்துக்கும், அதன்மேற் படும் ஒளிக்கும் ஏற்றவாறு குவிந்தும் விரிந்தும் செயற்படும் திறமுடையது. எனினும். கண்ணும் கண்ணுள்

இருக்கும் உறுப்புக்களும் தாமே இயங்குவன அல்ல. அவை உயிர் இயக்க இயங்குவன. கண்ணானது உயிரினால் செலுத்தப்படுவதோடு அவ்வுயிர் உடன் கலந்து நின்றாலன்றிக் காணுதலாகிய தொழிலைச் செய்யாது. அதனால்தான், 'காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்' என்கிறார் ஆசிரியர்.

அதேபோல் உயிருக்குக் காட்டுகிற ஒரு பொருள் உண்டு. அது பரம்பொருள். அஃது உயிருக்கு ஒரு பொருளைக் காட்டுவதோடு உடனிருந்து காணவும் செய்கிறது. அப்பரம் பொருள் காட்டுவது அமையும். காண்பது ஏன் என்ற கேள்வி எழலாம். ஒரு கணக்கு ஆசிரியர் மாணாக்கனுக்கு வகுப்பில் கணக்குப் போட்டுக் காட்டுகிறார். காட்டுவதோடு உடனிருந்து போடுவதைக் காணவும் செய்கிறார். அவ்வாறு காணவில்லையானால் மாணாக்கன் தவறு செய்து விடலாம். அதுபோல முதல்வன் பொருளைக் காட்டுவதோடு உடனிருந்து காணவும் செய்கிறான். அது எங்ஙனம் எனில், ஒரு விஞ்ஞானி ஓர் உண்மையைக் காண முயலுகிறான். பல நாள் பல முறையில் அவனது ஆராய்ச்சி நடக்கிறது. தெளிவு பெறவில்லை. ஆனாலும் விடாது முயலுகிறான். முடிவில் அவனது உணர்வுக்குள் ஓர் அருள் ஒளி தோன்றி உண்மை நெறியை காட்டுகிறது. இதுவே காட்டும் உபகாரம் எனப்படும். இனி அவ்வருள் ஒளி உடனிருந்து ஒழுங்குபெற ஆராய்ச்சி நடைபெறுதற்கும் வெற்றி காண்பதற்கும் உதவுகிறது. இது காணும் உபகாரம் எனப்படும். முதல்வனது இவ்விருவகை உபகாரம் தான் இன்றைய விஞ்ஞானிகள் புதிய புதிய உண்மைகளைக் கண்டு பிடித்து உதவுவதற்குக் காரணமாகும். இஃது எல்லா விஞ்ஞானிகள் வாழ்விலும் காணப்படும் ஒரு சிறந்த உண்மையாகும். அன்றியும் இவை எப்பொழுதும் எவ்

விடத்தும் நடந்துகொண்டிருப்பவை என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். ஆகவேதான் 'கரண உள்ளத்தைக் கண்டு காட்டலின்' என்கிறார்.

காரைக்கால் அம்மையாரும்,

'அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே'

என்று அற்புதத் திருவந்தாதி என்ற அருநூலில் கூறுகிறார். முதல்வன் அறிவிப்பதோடு தானும் உடனிருந்து அறிவாய் அறிகின்றான் என்பது இவ்வரிகளால் விளங்குகின்றது. 'கண்டு காட்டலின்' என்றதை 'காட்டிக் காண்டலின்' என்று மாற்றிப் பொருள் உரைக்கப்பட்டது. இதனால் முதல்வன் உயிர்கள் பொருட்டுக் காட்டுவதும் உடனிருந்து காண்பதும் செய்கிறான் என்பது பெறப்படும்.

முதல்வனது இவ்விருவகை உபகாரத்தினையும் நினையுமிடத்து அவன்பால் உயிருக்கு அளவிறந்த அன்பு உண்டாகும். ஏன் எனில் உதவி செய்தாரிடத்தில் உதவி பெற்றவர் பேரன்பு செலுத்துவது இயற்கை. முதல்வன்பால் செலுத்துகின்ற அன்பே ஞானம் என்பர் சேக்கிழார். 'ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்' என்பது அவரது திருப்பாசுர உரை. ஞானம் வீடுபேற்றை நல்கும் என்பது யாவர்க்கும் உடன்பாடு. 'ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் ஓதுகின்றன' என்பர் அருள்நந்திசிவம். ஆதலால் 'அன்பின் அரன்கழல் செலுமே' என்கிறார்.

கருத்து: முதல்வனிடத்தில் அன்பு செலுத்தலால் வீடுபேறு எய்தலாம் என்பது கூறப்பட்டது.

———

பன்னிரண்டாவது சூத்திரம்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன்எனத் தொழுமே.

முடிவு : தாள் சேரல் ஒட்டா மலம் கழீஇ; அன்பரொடு மரீஇ; வேடமும் ஆலயமும் அரன் எனத் தொழும். கழீஇ, மரீஇ என்ற வினையெச்சங்களை முற்ருக்கிக்கொள்க.

பதப்பொருள் : செம்மலர் நோன் தாள் - முதல்வனுடைய செம்மையான மலர். போன்ற வலிய திருவடியை ; சேரல் ஒட்டா - நினைய ஒட்டாமல் தடுக்கின்ற ; அம்மலம் - அந்த ஆணவ மலத்தை ; கழீஇ - நீக்குக; அன்பரொடு மரீஇ - முதல்வனது இருவகை உபகாரமும் நினைந்து அன்பு செய்யும் நன் மக்களோடு கலந்து உறவு கொள்க ; நேயம் மாலற மலிந்தவர் - ஞாதுரு ஞான ஞேயங்களில் சிறந்ததாகிய நேயம் மயக்கமற நிறைந்த பெரியோர்களையும் ; வேடம் - அவரது வேடத்தையும்; ஆலயம் தானும் - திருக்கோயில்களையும்; அரன் என - சிவபரம் பொருள் என்று தெளிந்து; தொழும் - தொழுக.

விளக்கம் : முற்சூத்திரத்தில் முதல்வனது இருவகை உபகாரத்தையும் நினைந்து அயரா அன்பினல் அரன்கழல் செல்வோரைக் குறிப்பிட்டார். இங்கு அத்தகைய அன்பர்களோடு கூடி அரன் கழலை வழிபட வேண்டும் என்று கூறுகிருர்.

முன்பு எட்டாம் சூத்திரத்தில் ஞானசிரியனுல் ஞானம் அருளப் பெற்ற ஆன்மா, பொருளாகிய

பாசச் சார்பிலிருந்து நீங்கி, வேறு சார்பு இல்லாமை யால் திருவருட் சார்பாகிய முதல்வன் திருவடியையே அடையும் என்று உணர்த்தற்கு "அரன் கழல் செலுமே" என்று ஆசிரியர் அறிவுறுத்தினார். பின்பு பதினோராம் சூத்திரத்தில் தான் பெற்ற சிவஞானப் பயிற்சியால் ஆன்மா, தன் பொருட்டு முதல்வன் கண்டும் காட்டியும் உபகரிக்கும் அருட் செயல்களை யுணர்ந்து அயரா அன்பு செய்து "அரன் கழல் செலுமே" என்று அருளினார். இங்ஙனம் ஒரு முறைக்கு இருமுறை அரன் திருவடியையே முடிபாகச் சுட்டினு ராதலால் அதனைக் கேட்கும் ஆன்மா அத் திருவடியின் சிறப்பை அறிய ஆர்வம் உறுவதால் அதைக் காட்டு வதற்கு இங்கே "செம்மலர் நோன் தாள்" என்று தெரிவிக்கிறார். முதல்வன் திருவடியே ஆன்மாக்கட்கு முடிவிடம் என்பதைப் "பற்றற்றார் பற்றும் பவள அடி" என்று ஞானசிரியரான நாவுக்கரசர் நவில்வது காண்க.

முதல்வனது திருவடியை மலர் எனப் பொதுப் படக்கூறியதனால், தாமரை கொள்ளப்படும் "பூவினுக்கு அருங்கலம், பொங்கு தாமரை" என்பர் திருநாவுக் கரசர். மலர், வண்ணமும் ஒளியுமுடையது, ஆனாலும் தாமரைக்குக் குவிதலும் மலர்தலும் ஆகிய குறையுண்டு. முதல்வன் திருவடியோ வண்ணமும் ஒளியுமுடைய தாயினும் குவிதலும் விரிதலும் இல்லாதது. குவிதல் விரிதல் இல்லாமல் ஒரு தன்மைத்தாவது தான் செம்மை. அது பற்றித்தான் "செம்மலர்" என்கிறார். மலர் போன்றது என்றலுமே மென்மைத் தன்மை நினை வுக்கு வரும். இறைவன் திருவடி தன்னைச் சேர்ந் தோரை மீளாமல் தன் நீழற் கண்ணே நிலைபெறச் செய்யும் வன்மையுடையது. அதனால் திருவடியை நோன்தாள் என்று கூறுகிறார். நக்கீரரும் "உறுநர்த்

தாங்கிய மதனுடை நோன்தாள்'' என்பர். ''மேவி ஞர் பிரியமாட்டா விமலஞர்'' (கண்ணப்பர் புராணம்) என்று சேக்கிழார் கூறுவது நினைவுகூறத் தக்கது. இத்துணைச் சிறப்புப் பொருந்திய திருவடியைச் சேர விடாமல் தடுத்து நிறுத்துவது மலம்! அதன் செயல் அறிவை மறைப்பதும், உதவியை மறக்கச் செய்வதும் ஆகும். மறைப்பும், மறப்பும், எப்பொழுதும் நேர்வழி யில் செல்லும் உயிரைத் தவறு செய்யப் பண்ணுகின் றன. மண்ணக வாழ்வு மிகச் சிறந்தது; அறிவு பெற்று உய்தி பெறுவதற்குரிய நெறியைக் காட்ட வல் லது; பூமியானது உயிர்கள் செம்மையாக வாழ்வதற் காக அமைக்கப்பட்ட ஓர் படைப்பாகும். ''பூமி சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு'' என்பது திருவாசகம். எனி னும் அநாதியாகவுள்ள மலப் பிணிப்பால் உயிர்கள் இறைவனது நோன்தாளைச் சென்றடையாமல் நெறி தவறிச் செல்கின்றன. அதன் பயனுகத் துன்பத்துக்கு ஆளாகின்றன. எதிர் காலத்தை மறைத்து இறந்த காலத்தை மறப்பித்து நிகழ் காலத்திலும் உள்ளத்தில் நல்ல நினைவுகள் தோன்ருதபடி செய்வது மலம். ''தூய நினைவைத் தூ மொழியைத் தூய செயலைத் தோற்ருது, தீய நினைவைத், தீ மொழியை, தீயசெயலைத் தவத் தோற்றும் மாய ஆணவப் பகை'' என்று கச்சியப்ப முனிவர் விளக்குவது இங்கே காணத்தக் கது. இதனுல் ஞான வொளி பெற்ற விடத்தும், முதல்வன் திருவடியைச் சேர வொட்டாமல் நினைவை யும் சொல்லையும், செயலையும் மாற்றி விடுவது பற்றி ''நோன்தாள் சேரலொட்டா அம்மலம்'' என்றும், அத னுடைய கொடுமை விளங்குதற்கு ''அம்மலம்'' என்று சுட்டியும் ஆசிரியர் அறிவுறுத்துகின்ருர்.

இவ்வாறு என்றும் ஒரு தன்மைத்தாகும் செம்மை யும், தன்னை அடைந்தார்க்கு இன்பங்கள் நல்கும்

மென்மையும், தன்னை மேவினரை மீண்டும் பிறவிக்குட் புகாதவாறு தாங்கும் நோன்மையும் உடைய திருவடியை அடைவதே "செய்யத்தக்க செயலாவது" என உணர்ந்த வழியும், செய்ய விடாமல் தடுக்கும் - "நோன்தாள் சேரல் ஒட்டா" - அம்மலத்தை வலியழித்து அறிவைத் தடுக்காதபடி கெடுப்பதே ஆன்மா செய்ய வேண்டிய பணியாகும். அம்மலத்தை எவ்வாறு நீக்கலாம் ?

நமக்கு இன்பமும் துன்பமும் மாறி, மாறி வருகின்றன. ஆனால் இன்பத்தில் மயக்கமும், துன்பத்தில் கலக்கமும் உண்டாகின்றன. ஆயினும், நாம் அறிவு மயங்காமல் துன்ப இன்பங்களின் காரணத்தை எண்ணி அறியவேண்டும். இன்பத்தில் மறந்தாலும் துன்பத்தில் சிந்தனையைத் தூண்டுவது எளிது, துன்பம் ஏன் வந்து சுடுகிறது என்று சிந்திக்க வேண்டும். அவ்வாறு சிந்திக்கச் சிந்திக்க உண்மை ஒளி தோன்றும். இச்சிந்தனைதான் மலத்தைக் கழுவும் நெறியாகும். இவ்வாறு கழுவவே முதல்வனது உபகாரம் நினைவுக்கு வரும். இங்ஙனம் சிந்தனை வளர்ச்சியாலும், ஞாபக சக்தியாலும் மலத்தினுடைய ஆற்றலைக் குறைக்கலாம்.

மலத்தின் வியாபகத்தையும், ஆற்றலையும் சாத்திரங்கள் எடுத்துரைப்பதைப் படிக்கும்போது, இதனை எவ்வாறு மாற்றுவது என்று நமது அறிவு மலைக்கிறது. அது எவ்வளவு ஆற்றலுடையதாயினும் திருவருள் துணையால், கண்ணாடியில் படிந்த மாசு போல எளிதில் துடைக்கப்படும் ; வெள்ளிப் பாத்திரத்தில் ஒட்டிய அழுக்குப் போலக் கழுவப்படும் என்பதற்காகத்தான் ஆசிரியர், 'அம் மலம் கழுவுக' என்று உரைக்கிறார். சுருங்கச் சொன்னால் காரண

காரிய ஆராய்ச்சியாகிய நீரால் அம்மலத்தைக் கழுவுதல் வேண்டும் என்பதாம். அதுபற்றியே 'செம் மலர் நோன் தாள் சேரல் ஒட்டா அம்மலம் கழீஇ' என்று ஆசிரியர் நாம் செயற்படுமாறு கூறுகிறார். மலம் என்று கூறாது, 'அம்மலம்' என்று சுட்டியது, முதற் சூத்திரத்திலும், நான்காவது சூத்திரத்திலும் கூறப் பட்ட மலம் என்பதை நினைவு கூர்வதற்காகவும் எடுத்தும் படுத்தும் கூறிய வழி அதன் வன்மையும் மென்மையும் புலப்படுவதற்காகவுமாம். உலகப் படைப்புக்குக் காரணம் மலம் என்பது முதற் சூத்திரத்தாலும், உயிரொடு கிடந்து அறிவை மறைப்பது மலம்என்பது நான்காவது சூத்திரத் தாலும் அறியப்பட்டனவாம்.

இந்த மலத்துக்கு மற்றொரு தன்மையுண்டு. குளம், குட்டைகளில் படிந்திருக்கும் முட்டைப் பாசிபோல அறிவை மறைத்திருக்கும், இந்த மலம், தொட்ட வழி நீங்கி விட்டவழிப் பரந்து மூடும் பாசிபோல, அறிவா ராய்ச்சி செய்த வழி நீங்கி, விட்ட வழி, அறிவை மூடிக் கொள்ளும். அது மீண்டும் தாக்காமல் இருப்பதற்கு இறைவனுடைய இருவகை உபகாரங்களையும் எண்ணி அயராது அன்பு செய்து அரன் கழலையே எண்ணு கின்ற அன்பர்கள் கூட்டத்தைச் சேரவேண்டும். அதனால், மலத்தின் மறைப்பு விலகியே நிற்கும். எங்ஙன மெனில் இத்தகைய அன்பர்கள் முதல்வனது திரு வருளையே இடையறாது எண்ணிக் கொண்டிருப் பார்கள்; அறிவாராய்ச்சியால் மறதியும் மறைப்பும் அற்றவர்கள். அவர்களோடு கூடுவதால் மலத்தினால் உண்டாகும் மறதியும் மறைப்பும் இல்லையாம். ஆகவே 'அன்பரொடு மருவுக' என்று கூறுகிறார். மாணிக்க வாசக அடிகள் இம்மை வாழ்வுக்கு இதனையே சிறந்த பேறாக எண்ணி,

'அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்' என்று பொன்னம்பலக் கூத்தனை வேண்டுகிறார். திருவருள் அறிவு ஆராய்ச்சியால் இறைவனது உபகாரத்தை எண்ணி அவன் பால் அன்பு செய்ப வரை அன்பர் என்றும், பக்தர் என்றும் ஞானிகள் என்றும் கூறுவர். "ஞானம் ஈசன் பால் அன்பே என்றனர் ஞானம். உண்டார்" என்று சேக்கிழார் அடிகள் உரைப்பதால் அன்பரை ஞானிகள் என்றும் அடியவர் என்றும் பெரியோர் கூறுவது காணலாம். அடி என்பது திருவடி ஞானம். "சிவனடியே சிந்திக் கும் திருப்பெருகு சிவஞானம்" என்பர் சேக்கிழார். அன்பு பற்றி இறைவனுக்கும் ஏனை உயிர்கட்கும் தொண்டு செய்பவரைத் தொண்டரென்று கூறுவர். அன்பும், ஞானமும் வெளிப்படுவது செய்யப்படும் தொண்டு ஒன்றினுலேயாம். அதுபற்றியே ஞான சம்பந்தர் முதலிய பெருமக்கள் தொண்டர்களையே பெரிதும் எடுத்து மொழிகின்றனர். "விண்டொழிந் தன நம்முடைய வல்வினை......தொண்டர் தொண்ட ரோடு இனிது இருந்தமையால்" என்பர் ஞான சம்பந்தர்; தொண்டர்க்குத் தொண்டராதல் சிவ புண்ணியம் என்பர் நாவரசர். இதனையடுத்து அடிய வர் வேடத்தைக் கூறுகின்றார்.

கான்பான், காட்சி, காட்சிப் பொருள் ஆகிய மூன்றையும் ஞாதுரு ஞானம் ஞேயம் என்று வடமொழி யில் கூறுவர். ஞானத்தால் தெளியப்படுவது ஞேயம் அல்லது நேயம். அதுவே சிவமாகிய மெய்ப்பொருள். அம் மெய்ப் பொருளை மயக்கமற உணர்ந்தவர்களே சிவஞானிகள். அவர்களுடைய மேனியில் சிவஞானத் தின் ஒளி பரவிக் காண்பவர் உள்ளத்தில் அடியற்ற மரம் போல் வீழ்ந்து வணங்கிட வேண்டும், வாயால் வாழ்த்திட வேண்டும் என்ற உணர்வை எழுப்புகிறது.

அது பற்றியே அவர்களை "நேயம் மால் அற மலிந்தவர்" என்று ஆசிரியர் குறிக்கின்றார். அடியார் வேடம் பூண்டு அடாதன சொல்லிய முருகப் பெருமானை நோக்கி வள்ளிநாயகியார், "நேயம் மலி மெய்யடியர் நேர்ந்துழியும் நின் போல், மாயமென உள்ளும் ஒருவான் பழியும் வைத்தாய்" (தணிகை, களவு) என்று கூறுவதில் "மாலற நேயம் மலிந்தவர்" என்ற தொடர் அமைந்து கிடப்பது இங்கே நினைவு கூறத் தக்கது.

அரச வேடம் பூண்டவனுக்கு அவனது மேனியும் புறத்தே அணியும் ஆடை அணிகலன்களும் அரசத் தன்மையை நினைப்பிக்கும். அதுபோல மெய்யடியார் களின் மேனியும், அணியும் திருநீறும், கண்டிகையும் பிறவும் சிவத்தை நினைப்பித்துக் காணும் அன்பர்களை மகிழ்வித்து வணங்கி வழிபடச் செய்யும். அதனால் "மாலற நேயம் மலிந்தவர்களை அரன் எனத் தொழுமே" என்று கூறுகிறது இச்சூத்திரம். சிவம் வேறு அவர்கள் வேறு என்று நினையாமல் சிவனெனவே தேறி வழிபட வேண்டும் எனபதாம்.

அடுத்து ஆலய வழிபாடு கூறுகிறார். ஆலயம் என்பது அகத்தே திருக்கோயிலும் அதனைச் சுற்றித் திருமதிலும் கொண்டு அகன்று உயர்ந்த வாயிலும் உடையது. இதனை,

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே'

(திருமந்திரம் 1792)

என்பதினால் அறிக. நாவுக்கரசரும் காயமே கோயில் என்றும் மனமணி சிவலிங்கமென்றும் குறித்தருளுகின்றார். நேயம் மலிந்தவர் நடமாடும் ஆலயம்;

இது நடக்காத ஆலயம், இந்த ஆலயத்தையும் சிவ னென்று தேறி வழிபடவேண்டும். வழிபாட்டுக்குச் செல்வோர் கோபுர வாயில் வழியாக உள்ளே சென்று, வலம் வந்து கொடி மரத்தின் வழியாக உள்ளே புக வேண்டும். மகா மண்டபம் கடந்து அர்த்த மண்டபத்துக்குச் சென்று கர்ப்பக் கிருகத்தி லுள்ள திருமூலப் பெருமானை அருச்சனை செய்து வழி பட வேண்டும். பின்னர்க் கொடிமரத்தின் பக்கத்தே அமர்ந்து தியானம் செய்ய வேண்டும். உடம்பிலுள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம் (உந்தி) மணிபூரகம் (இதயம்) அநாகதம் (கழுத்து) விசுத்தி (புருவநடு) ஆக்ஞை (பிரமரந்தாம்) ஆகிய ஆறு ஆதாரங்களிலும் கோயிலிலுள்ள ஆறு இடங்களாகக் கருதி ஆங்காங்கு திருமூலட்டரை வணங்கி வழிபட வேண்டும். அகவழி பாடு என்பது, அஞ்செழுத்தை ஓதுதலாம். அப் பொழுது மனத்தின் துள்ளல் அடங்கும். அதுவே ஞானம் என்பதாம்.

மேலும் இங்கே குறிப்பிட்ட வழிபாட்டில் சைவத் துக்கே சிறப்பாக உரிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கும் நெறியாக உள்ளன. கோயிலை வலம் வருதல் சரியை; அருச்சனை புரிதல் கிரியை; கொடி மரத்தின் கீழ் இருந்து தியானம் செய் தல் யோகம்; பரம்பொருளோடு ஒன்றுகின்ற நிலை ஞானம். திரிகூடராசப்ப கவிராய மூர்த்திகள்,

'தரையின் ஆலயம் வலம்முதற் திருப்பணிசரியை;
கிரிசன் எம்பிரான் அருச்சனை புரிவது கிரியை;
ஒருமையுள்ளுறத் தியான முற்றிருப்பது யோகம்;
பொருவிலானுடன் இரண்டறக் கலப்பது போதம்.'

(திருக்குற்ருலத் தல புராணம்)

என்ற பாடல் நன்கு விளக்குவதுபோல் அமைந் துள்ளது. இவ்வாறு ஆலயத்தினைக் கண்டபோது

அதனை அரன் எனவே வழிபட வேண்டும். ஆகவே, 'ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே' என்று கூறுகின்றார். இக்கருத்துப்பற்றியே திருஞான சம்பந்தர் முதலிய பெருமக்கள்தாம் சிவஞானம் பெற்ற செல்வராகியபோதும் அடியார் கூட்டத்தோடு தலங்கள் தோறும் சென்று வழிபட்டார்கள் என்ற உண்மையும் இங்கு நினைவு கூறத்தக்கது.

ஆலய வழிபாட்டை இறுதியில் கூறியதற்கு மற்றொரு காரணமும் உண்டு. இச்சூத்திரம் சிவஞானிகட்குக் கூறியதுபோல் தோன்றினும், சிவஞானம் பெற முயல்பவர்கட்கும் இது வழியாகும். ஆலய வழிபாட்டில் வலம் வருவதால் மலமறைப்பு நீக்குதற்கேற்ற மந்ததர அறிவுப் பக்குவம் உண்டாகும்; கிரியையால் மந்த பக்குவமும் யோகத்தால் தீவிர பக்குவமும் ஞானத்தால் தீவிர தர பக்குவமுண்டாகிச் சிவஞானம் விளங்குதற்குத் துணை செய்யும். இங்ஙனம் இவை ஒன்றுக்கொன்று காரண காரியமாய் அமைந்திருப்பதால், தாயுமானவர்,

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனிபோல் அன்றோ பராபரமே".

என்று கூறுகின்றார். இங்ஙனம் இருமையும், இன்ப வாழ்வு பெறுவதற்குரிய அறிவை நல்குவதால், ஆலய வழிபாடு இன்றியமையாது என்பது பற்றியே "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று அறிவுறுத்துகிறார் ஔவையார். இதுதான் வையத்து வாழ்வாங்கு வாழும் வழிமுறை.

கருத்து: அடியார் வழிபாடும், ஆலய வழிபாடும் இன்றியமையாதவை என்பது கூறப்பட்டன.

———

தம்மை உணர்ந்து தமையுடைய தன்உணர்வார்
எம்மை உடைமை எமை இகழார்—தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மில்
புணராமை கேளாம் புறம்.

முடிபு : தம்மை உணர்ந்து தன்னை உணர்வார் எம்மை உடைமையால் எம்மை இகழார் ; தம்மை உணரார் உணரார் ; உடங்கு இயைந்து தம்மில் புணராமையால் புறம் கேளாம்.

பதப்பொருள் : தம்மை உணர்ந்து – உயிர்களாகிய தமது இயல்பை இதுகாறும் போதிக்கப்பட்ட சிவஞானத்தால் உணர்ந்து ; தமையுடைய தன் உணர்வார் – தமக்கு உலகு உடல் கருவிகளை உதவிய முதல்வனை உணர்ந்து அன்பு செய்யும் பெரியோர் ; எம்மை உடமை – எங்களையும் தம்மைப்போல் அன்பு செய்பவர் என்று உணர்தலால்; எமை இகழார் – எம்மை வேருகக் கருதிப் புறக்கணிக்க மாட்டார்கள் ; தம்மை உணரார் – தம்மியல்பை இவ்வாறு உணராதவர்கள் ; உணரார் – எங்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை உணரமாட்டார்கள் ; உடங்கு இயைந்து தம்மில் புணரார் – உணராமையோடு அவர்களும் தம்மில் அன்பால் ஒன்றுபட்டு வாழவும் மாட்டார்கள் ஆதலால் ; புறம் – அன்பு நெறிக்குப் புறம்பாக அவர்கள் பேசும் கொள்கைகளையும், சொற்களையும் ; கேளாம் – பொருளாகக் கொள்ள மாட்டோம்.

விளக்கம் : இத் திருவெண்பாவை மெய்கண்ட தேவர் தாம் உரைக்கும் சிவஞான போதத்துக்கு அவையடக்கமாகக் கூறினர் என்பது மரபு. எனினும், இது சிவஞான போதம் என்ற இம்மெய்ந்நூலின் சாரமெல்லாம் திரட்டி முதல் இரண்டு அடிகளில் சுருங்க உரைத்துப் பின் இரண்டு அடிகளில்

சிவஞானம் பெற்ருர் எய்தும் மனவியல்பை உணர்த்துவதால், இந் நூலின் பயன் கூறுவதாகவும் கொள்ளக் கிடக்கின்றது. தம்மை உணர்தலாவது, தமக்கும் இறைவனுக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பை அறிந்து, அது ஏன் எப்படி உண்டாயிற்று என்பதை எண்ணுதல். தமையுடைய தன்உணர்வார் என்பது, தமக்கு உலகு உடல் கருவிகளை உதவி வாழ்வளித்தவன் முதல்வன் என்று அறிபவர்கள். இவ்வாறு உயிர்கள் தம்மை உணர்ந்து தமக்கு வாழ்வு அளித்த முதல்வனிடத்து அன்பு செலுத்துவது தான் சிவஞானம். 'ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானமுண்டார்' என்பர் சேக்கிழார் அடிகள். அவ்வாறு உணர்ந்த சிவஞானிகள் எல்லா உயிரையும் தம்முயிர் ஒப்ப எண்ணி அன்பு செய்வார்கள். ஏன் எனில், முதல்வன் தங்களைப் போலவே ஏனையோரையும் அன்பராகக் கொண்டு அருள்புரிபவன்.

'தம்மைப் போலத் தம் அடியார்க்கும் இன்பளிப்பவர்' என்றும்,

'பரவுவாரையும் உடையார் பழித்து
இகழ்வாரையும் உடையார்'

என்றும் திருஞானசம்பந்தர் அருளியிருப்பன இங்கே சிந்திக்கத் தக்கன. மேலும் சிவஞானிகள் தாங்கள் முதல்வனிடத்தில் எவ்வளவு தொடர்பும் உரிமையும் உடையவர்களோ, அவ்வளவு தொடர்பும் உரிமையும் எல்லா உயிர்களும் உடையவை என்று உணர்வார்கள். இவ்வொற்றுமையால் சிவஞானிகளுக்குத் தம்மை ஒத்த ஏனைய உயிர்களிடத்தில் அன்பும், ஆதரவும் உண்டாகுமே தவிர வேற்றுமை மனப்பான்மை உண்டாகாது. அது பற்றியே, 'எம்மை உடைமை எமை இகழார்' என்கிருர். இதனுல் சிவஞானம்பெற்ருர் செயல் நலம் தெரிவிக்கப்படுகிறது.

இனி, பின் இரண்டு அடிகளில் சிவஞானம் பெறாதவர் இயல்பு கூறுகின்றார். சிவஞானம் பெறாதவர்களை, 'தம்மை உணரார்' என்று சுருக்கமாகக் கூறுகிறார். விளங்க உரைக்கின், அவர்கள் ஏனைய உயிர்களையும் தம்மைப் போல 'மண்ணகத்தே வந்து வாழச் செய்தான்' முதல்வன் என்பதையும், அவை வாழ்வாங்கு வாழ்வதற்கு உதவுவது சிவஞானத்தின் பயன் என்பதையும் உணர்வதில்லை. பிறர் வாழ்ந்தால் அன்றித் தமக்கு வாழ்வில்லை (Let live and live) என்பது சைவம். ஆதலால், 'தம்மை உணரார் உணரார்' என்று அருளுகின்றார். இவ்வாறு மக்களை ஒன்றுபடுத்தும் சிவஞானம் பரவாமையினாலே மக்களிடையே வேற்றுமை உணர்வுகள் இடம் பெற்று ஒன்று படாதபடி சிதைக்கின்றன. இதனை, 'உடங்கு இயைந்து தம்மில் புணரார்' என்று கூறுகிறார். உடங்கு இயைதலாவது, மனம் கலந்து அன்பு செய்து ஒன்றி வாழ்தல். சிவஞானம் பெறாது போனால் மக்கள் இனம் ஒற்றுமைப்பட்டு வாழ்வாங்கு வாழும் வளமான நிலை பெறாது என்பது, இத்தகைய கூட்டம் ஒற்றுமைக்குப் புறம்பான பேச்சுக்களையே பேசித் திரியுமாதலால் அதனை, 'புறம்' என்றும், சிவஞானிகள் அதனைப் பொருளாகக் கொள்ளலாகாது என்பதற்காக, 'கேளாம்' என்றும் அறுதியிட்டுக் கூறுகிறார். எனவே, மக்களினம் ஒற்றுமைப் பட்ட வளமுடைய வாழ்வு பெறச் செய்வதுதான் சிவஞானத்தின் முடிந்த பயன் என்பது தெளிவாகும்.

கருத்து : சிவஞானந்தான் மக்களிடையே அன்பும் ஒற்றுமையும் உண்டாக்க வல்லது என்பது கூறப்பட்டது.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.

————

பிழைத் திருத்தம்

பக்க எண்.	வரி.	பிழை.	திருத்தம்.
28	12	மரவராகிய	குரவராகிய
29	2	சத்தெதுர்	சத்தெதிர்
29	2	இது அகலின்	ஆகலின்
42	15	நாடுங்சுால்	நாடுங்கால்
52	6	காட்டித்	காட்டி

கிடைக்கும் இடம் :—

திருச்சிராப்பள்ளித் தமிழ் சங்கம்,
மேலரண்சாலை, திருச்சிராப்பள்ளி-2.

பழனியப்பா சகோதரர்கள்,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி-2.